தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

17.10.2012 P.M

18.10.2012 A.M

## வடகிழக்குப் பருவ மழை: 16.50 லட்சம் ஹெக்டேரில் நெல் பயிரிட இலக்கு

தமிழ்நாட்டில் இந்த ஆண்டு வடகிழக்குப் பருவ மழை காலத்தில் சுமார் 16.50 லட்சம் ஹெக்டேரில் நெல் பயிரிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தென் மேற்குப் பருவ மழை பொய்த்ததால், தரிசாக இருக்கும் சுமார் 2 லட்சம் ஹெக்டேர் நிலத்தையும் வடகிழக்குப் பருவ மழை காலத்தில் சேர்த்துப் பயிரிடும் வகையில் இந்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக வேளாண்மை துறை வட்டாரங்கள் புதன்கிழமை தெரிவித்தன.

வடகிழக்குப் பருவ மழை தொடங்கும் நிலையில் உள்ளது. இந்தப் பருவத்தில் தென் மாவட்டங்களில் "பிசானம்' என்றும், காவிரி டெல்டா பகுதிகளிலும், வட மாவட்டங்களிலும் "சம்பா' என்றும் அழைக்கப்படும் நெல் பயிரிடும் பருவத்தில் வழக்கமாக சுமார் 14.16 லட்சம் ஹெக்டேரில் நெல் பயிரிடப்படும்.

இந்த ஆண்டு தென் மேற்குப் பருவ மழை பொய்த்ததால் தென் மாவட்டங்களில் "கார்' என்றும், காவிரி டெல்டா பகுதிகளில் "குறுவை' என்றும், வட மாவட்டங்களில் "சொர்ணவாரி' என்றும் அழைக்கப்படும் நெல் பயிரிடும் பருவத்தில் வழக்கமான பரப்பளவான சுமார் 4.40 லட்சம் ஹெக்டேரில் சுமார் 2 லட்சம் ஹெக்டேர் வரை தரிசாக இருக்கலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் வழக்கமான மழை அளவு 930.7 மி.மீ. ஆகும். இதில் சுமார் 45 சதவீத மழை வடகிழக்குப் பருவ மழை காலத்தில்தான் கிடைக்கும். அந்த வகையில் இந்த ஆண்டு சராசரி மழையோ அல்லது அது விட சற்று கூடுதலாகவோ கிடைக்கும் என வானிலை முன்னறிவிப்புகள் தெரிவிக்கின்றன.

எனவே, இந்த வடகிழக்குப் பருவ மழை காலத்தில் வழக்கமாக நெல் பயிரிடும் பரப்பளவான 14.16 லட்சம் ஹெக்டேருடன், தென் கிழக்குப் பருவ பொய்த்ததால் தரிசாக இருக்கும் சுமார் 2

லட்சம் ஹெக்டேரையும் சேர்த்து மொத்தம் 16.50 லட்சம் ஹெக்டேரில் நெல் பயிரிட வேளாண்மை துறை இலக்கு நிர்ணயித்துள்ளது.

சிறப்புத் திட்டங்கள்: காவிரி டெல்டா பகுதிகளில் இந்த ஆண்டு குறுவை சாகுபடி முழுமையாக இல்லாததால் தரிசாக இருக்கும் நஞ்சை நிலம் முழுவதையும் சம்பா சாகுபடி செய்ய விவசாயிகளை ஊக்குவிக்கவும், கால அளவைக் குறைக்கவும் சிறப்புத் திட்டங்களை அரசு அறிவித்துள்ளது.

அதன்படி, பம்ப் செட் வைத்திருக்கும் விவசாயிகளின் உதவியுடன் சமுதாய நாற்றங்கால் திட்டம் செயல்படுத்தப்படும். அந்த நெல் நாற்றுகள் இதர விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படும். அதற்கான மானியத்தை அரசு வழங்கும். இந்த திட்டத்துக்கு ரூ.19 கோடியை அரசு ஒதுக்கியுள்ளது. நேரடி விதைப்பை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு மானியம் வழங்க அரசு ரூ.2.40 கோடியை ஒதுக்கியுள்ளது. விதைப்பு மற்றும் உரமிடும் கருவிகள் கொள்முதல், திருந்திய நெல் சாகுபடி திட்டம், களை கொல்லி மருந்துகள் வழங்குதல் என மொத்தம் 10 வகையான மானிய திட்டங்களுக்கு அரசு மொத்தம் ரூ.53.53 கோடியை ஒதுக்கியுள்ளது.

இடுபொருள்கள் இருப்பு: இந்தப் பருவத்தில் நெல் சாகுபடி பரப்பு இலக்கை முழுமையாக எட்டுவதற்கு தேவையான விதை, உரம், பூச்சி மருந்து போன்ற வேளாண் இடுபொருள்கள் அனைத்தும் இருப்பு வைக்கப்பட்டுள்ளதாக வேளாண்மை துறை உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தப் பருவத்துக்கு மொத்த விதை நெல் தேவை 23,570 மெட்ரிக் டன் ஆகும். இப்போதைய இருப்பு 25,690 மெ.டன் ஆகும். இதேபோல், சிறுதானியங்கள் 1,157 மெ.டன்னும், பருப்பு வகைகள் 1,259 மெ.டன்னும், எண்ணெய் விதைகள் 3,525 மெ. டன்னும், பருத்தி 116 டன்னும் இருப்பு உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.


உரங்களைப் பொருத்தவரையில், அக்டோபரில் யூரியாவின் தேவை 1.73 லட்சம் மெ.டன் ஆகும். இப்போது 1.06 லட்சம் மெ.டன் கையிருப்பு உள்ளது. இந்த மாதம் மத்திய அரசு 2.18 லட்சம் மெ.டன் யூரியாவை அளிக்கும். டி.ஏ.பி.யின் தேவை 70 ஆயிரம் மெ.டன் ஆகும். இப்போது 52,836 மெ.டன் கையிருப்பு உள்ளது. மத்திய அரசு 63 ஆயிரம் மெ.டன் அளிக்கும். பொட்டாஷ் தேவை 84 ஆயிரம் மெ.டன் ஆகும். இப்போது 99.94 ஆயிரம் மெ.டன் கையிருப்பு உள்ளது. மத்திய அரசு 73,200 மெ.டன் அளிக்கும். கலப்பு உரங்களின் தேவை 90,760 மெ.டன் ஆகும். இப்போது 79,505 மெ.டன் கையிருப்பு உள்ளது. மத்திய அரசு 1.05 லட்சம் மெ.டன் அளிக்கும். எனவே, விவசாயிகளுக்கு தட்டுப்பாடு இல்லாமல் உரங்கள் கிடைக்கும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

**"பிசானம்' பருவத்துக்கு சிறப்புத் திட்டம் அறிவிக்கப்படுமா?**

கரவிரி டெல்டா பகுதியில் குறுவை சாகுபடி பொய்த்த இடங்களில் சம்பா பருவத்தின் கால அளவைக் குறைத்து இலக்கை எட்டு வகையில் 10 வகையான சிறப்புத் திட்டங்களை அரசு அறிவித்து ரூ.53.53 கோடியை ஒதுக்கியுள்ளது.

தென் மேற்குப் பருவ மழை பொய்த்ததால் தென் மாவட்டங்களில் கார் பருவ சாகுபடி வெகுவாக பாதித்தது. அங்கும் பல ஆயிரம் ஹெக்டேர் நிலங்கள் தரிசாக உள்ளன. அந்த நிலங்களில் இந்த வடகிழக்குப் பருவ மழை காலத்தில்தான் விவசாயிகள் நெல் பயிரிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. காவிரி டெல்டா பகுதி விவசாயிகளுக்கு அறிவித்துள்ளது போன்றே தென் மாவட்ட விவசாயிகளுக்கும் பிசானப் பருவத்துக்கு ஊக்குவிப்புத் திட்டங்கள் அறிவிக்கப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு விவசாயிகளிடையே எழுந்துள்ளது.

**வங்கக் கடலில் காற்றழுத்த தாழ்வுநிலை: 48 மணி நேரத்தில் பருவ மழை தொடங்கும்**



வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை உருவாகியுள்ளதால் தமிழகத்தில் கனமழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு தென்மேற்குப் பருவ மழை இயல்பைவிட குறைவாகப் பெய்தது. இருப்பினும் பருவ மழை காலம் முடியும்தருவாயில் தமிழகத்தின் பல பகுதிகளில் கடந்த சில தினங்களாக பலத்த மழை பெய்து வருகிறது. வடகிழக்குப் பருவ மழை இன்னமும் தொடங்காத நிலையில், இப்போது பெய்து வரும் இந்த மழையால் மாநிலத்தில் பல்வேறு நீர் ஆதாரங்கள் நிரம்பி வருகின்றன.

இதுகுறித்து வானிலை ஆய்வு மைய இயக்குநர் ரமணன் கூறியது: காற்று சுழற்சியின் காரணமாக கடந்த இரு தினங்களாக மழை பெய்துவருகிறது.

இந்த நிலையில், தென்கிழக்கு வங்கக் கடல் பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை உருவாகியுள்ளது. இது தமிழகத்தை நோக்கி நகர்ந்து வருகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் கனமழை பெய்யும்.

இன்னும் 48 மணி நேரத்தில் வடகிழக்குப் பருவ மழை தொடங்குவதற்கான வாய்ப்புகள் பிரகாசமாகியுள்ளன.

சென்னையை பொருத்தவரையில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். சில இடங்களில் மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது என்றார் அவர்.

பதிவான மழை அளவு (புதன்கிழமை காலை நிலவரம் - செ.மீ.): பழனி - 9, பெரியகுளம் - 8, தாராபுரம் - 7, ராமநாதபுரம், கோவை, சூலூர் - 6.

17th oct 2012 P.M

**பயிர்களை தாக்கும் வாடல் நோயும் அதைக் கட்டுப்படுத்தும் முறைகளும்**



விவசாயப் பயிர்களை நாற்றழுகல், தண்டழுகல், வேரழுகல் போன்ற நோய்கள் அதிகம் தாக்குகின்றன. இந் நோய் தாக்கினால் தாவரங்கள் வாடி விவசாயிகளின் மகசூல் பெரிய அளிவில் பாதிக்கிறது.

புதுச்சேரி பகுதியில் பயிரிடப்படும் முக்கிய காய்கறிகளான தக்காளி, கத்தரி, மிளகாய் மற்றும் அனைத்து காய்கறி பயிர்களிலும் நாற்றழுகல், தண்டழுகல் மற்றும் வேரழுகல் நோய்கள் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

இந்நோய்கள் இளம் நாற்றுகளின் தண்டுப் பகுதியை தாக்கி மடியச் செய்கின்றன.

இந் நோய் தாக்கினால் தண்டு பாகம் வலுவிழந்து அடிப்பகுதி அழுகிவிடுகிறது. மேலும் இவ் வகையான பூஞ்சானம் மண்ணுக்கு அடியில் பல காலம் தங்கியிருந்து வேர் பாகத்தையும் தாக்கி அழிக்கும். இதனால் செடிகள் வாடி விவசாயிகளுக்கு பெரும் மகசூல் இழப்பு ஏற்படும்.

இந் நிலையில் இந் நோய்களை கட்டுப்படுத்துவது குறித்து புதுச்சேரி பெருந்தலைவர் காமராஜர் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் பூச்சியியல் துறை வல்லுநர் நி.விஜயகுமாரிடம் கேட்டபோது அவர் கூறியது:

இதுபோன்ற அழுகல் நோய்களை உண்டாக்கும் பூஞ்சானத்தை, டரைக்கோடெர்மா எனும் பூஞ்சானம் அழித்து பாதுகாப்பு அளிக்கும். இவைகளை மண்ணில் இடுவதன் மூலம் இவை இனவிருத்தி செய்து பல காலம் பயிர்களின் வேர்களுக்கு அடியில் உயிர்வாழும்.

இப் பூஞ்சானமானது பயறு வகை பயிர்கள், எண்ணெய் வித்து பயிர்கள், மற்றும் காய்கறி பயிர்கள் உள்பட அனைத்து பயிர்களிலும் மண்வழி மூலம் தாக்கும் நோய்களை கட்டுப்படுத்தும்.

இந்த வகை டிரைகோடெர்மா என்ற உயிருள்ள நோய்க் காரணிகள் பயிரை தாக்குகின்ற பூசணங்கள் அருகில் வரும்போது செல்லுலோஸ் மற்றும் கைட்டினேஸ் போன்ற நொதிகளை உருவாக்கும். இந்த நொதிகள் நோய்களை உண்டாக்கும் கிருமிகளின் செல்சுவரை அழிக்கும்.

இதோடல்லமால் விரிடின் மற்றும் டிரைகோடெரமைன் என்ற நச்சுப் பொருளை உருவாக்கி நோய்க் உண்டாக்கும் கிருமிகளை முற்றாக அழித்து பயிர்களை நோயிலிருந்து காக்கிறது.

இதேபோல் சூடோமோனாஸ் புளொரெசன்ஸ் என்ற பாக்டீரியாவையும் பயன்படுத்தி வாடல் நோய்களை கட்டுப்படுத்தலாம். இவற்றை நெற்பயிர், பயறு வகைகல், எண்ணெய் வித்துக்கள், காய்கறிகள், வாழை போன்றவற்குக்கு பயன்படுத்தலாம்.

ஆனால் இந்த உயிரியல் பூச்சிக்கொல்லிகளை விவசாயத்துறை வல்லுநர்களின் ஆலோசனைகளை கேட்டு அவர்கள் பரிந்துரைந்த நேரத்தில் சரியான அளவில் பயன்படுத்த வேண்டும்.

நோய் பெருமளவு சேதம் ஏற்படுத்திய பின் பயன்படுத்தினால் தேவைக்கு தகுந்த பலன் இருக்காது.

**வீட்டுத் தோட்டங்களைப் பாதுகாக்க எளிய பாசன தொழில்நுட்பம்**



- புதிய பாசன முறையில் நேரடியாகவே நீர்ப் பாசனம் செய்யப்படுவதால், வீட்டுத் தோட்டங்களில் களைகளுக்கு தண்ணீர் வீணாவதும் தடுக்கப்படுகிறது. இப்புதிய எளிய தோட்டக்கலை பாசன முறை வாயிலாக கேரள மாநிலத்தில் வீடுகளில் பல மருத்துவச் செடிகள், மூலிகைகள் அதிகளவில் வளர்க்கப்படுகின்றன.

கடந்த சில மாதங்களாக தமிழகத்தில் கடும் வெயில் வாட்டி வதைக்கிறது. மழை போதிய அளவு பெய்யாத நிலையில் கடும் வெப்பம், வீடுகளில் உள்ள தோட்டங்களை கடுமையாக பாதித்து வருகிறது.

அடுக்குமாடிக் குடியிருப்புகளில் காய்கறித் தோட்டம் அமைத்திருப்பவர்கள், அலங்காரச் செடிகளை நடவு செய்துள்ள இல்லத்தரசிகள் மற்றும் குழந்தைகள் தங்களது தோட்டங்கள் அழிந்து வருவதை வேதனையுடன் காணும் சூழல் உள்ளது.

மின்வெட்டு பிரச்னை காரணமாக ஏற்படும் நீர் பற்றாக்குறை சூழலும், வீட்டுத் தோட்டங்களுக்கு தேவைப்படும் அதிகளவு நீர்ப் பாசன தேவையை நிறைவு செய்ய உதவுவது கிடையாது.

இத்தகைய நடைமுறை சூழலில் வீட்டுத் தோட்டங்களில் செய்யப்பட்டுள்ள முதலீடுகளைப் பாதுகாக்கவும், வீடுகளின் காய்கறித் தேவைகளை நிறைவு செய்யவும் குறைந்த செலவில், தொழில்நுட்பத் திறனில் பயனில்லாமல் போகும் மருத்துவ பிளாஸ்டிக் கழிவுகள் பெரிதும் உதவி செய்கிறது.

எளிய பாசன தொழில்நுட்பம் குறித்து அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் விரிவாக்கத் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் தி.ராஜ்பிரவீண் தெரிவித்தது:

கேரள மாநிலம், கொச்சி மாவட்டத்தில் மருத்துவ பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி புதிய மற்றும் எளியப் பாசன தொழில்நுட்பம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. ÷இப்புதிய பாசன முறையில் மருத்துவமனைகள், வீடுகளில் மருத்துவத் தேவைகள் முடிந்து கழிவுகளாக எறியப்படும் பிளாஸ்டிக் பாட்டில்கள் அல்லது குடிநீர் பாட்டில்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

பின்னர் இவை நன்றாக சுத்தம் செய்யப்பட்டு இவற்றில் நல்ல தண்ணீர் அடைக்கப்படுகிறது. பின்னர் இலை சிறிய பிளாஸ்டிக் பாட்டில்களுடன் இணைக்கப்பட்ட குழாய்கள் வாயிலாக செடிகளின் வேர் பகுதிக்குள் செலுத்தப்படுகிறது.

சொட்டு நீர்ப் பாசன முறையில் நாள் முழுவதும் தண்ணீர் சொட்டுகளாக செடிகளின் தேவையை நிறைவு செய்வதால், அவை வெப்பத்தை தாங்கி எளிதாக வளர முடிகிறது. ÷மேலும் நாள் முழுவதும் தண்ணீர் பாசனம் செய்யப்படுவதால் தோட்டங்களில் நல்ல குளிர்ச்சியும் ஏற்படுகிறது.

தற்போதைய புதிய பாசன முறையில் நேரடியாகவே நீர்ப் பாசனம் செய்யப்படுவதால், வீட்டுத் தோட்டங்களில் களைகளுக்கு தண்ணீர் வீணாவதும் தடுக்கப்படுகிறது. இப்புதிய எளிய தோட்டக்கலை பாசன முறை வாயிலாக கேரள மாநிலத்தில் வீடுகளில் பல மருத்துவச் செடிகள், மூலிகைகள் அதிகளவில் வளர்க்கப்படுகின்றன.

இவ்வாறு மிகவும் குறைந்த செலவில் பிளாஸ்டிக் கழிவுகளை பயனுள்ள முறையில் நீர் பாசனத்துக்குப் பயன்படுத்தி அடுக்குமாடிக் குடியிருப்புத் தோட்டங்கள், வீடுகளின் வாயிலாக உள்ள காய்கறித் தோட்டங்களை எளிதாகப் பாதுகாக்க முடியும்.

பிறபயன்கள்: தற்போது கேரள மாநிலத்தில் வீட்டுத் தோட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள இப்புதிய பாசன முறையில் தண்ணீரில் கரையும் உரங்களை பரிந்துரைக்கப்பட்ட அளவில் பயன்படுத்தி அதிகளவில் மகசூல் பெற முடியும்.

பூச்சி மற்றும் நோய்த் தாக்குதலை கட்டுப்படுத்த எளிய மூலிகைக் கரைசல், பூச்சி விரட்டிகளை இப்புதிய பாசன தொழில்நுட்பத்தின் மூலம் கலந்து பயன்படுத்த முடியும். வீட்டுத் தோட்டங்களில் உள்ள பூக்கள் அதிகமாக பூக்கவும், தேவைப்படும் பயிர் ஊக்கிகளை பயன்படுத்தி செடிகளின் வளர்ச்சி மற்றும் பூக்கும் திறனை அதிகப்படுத்தலாம்.

எனவே அடுக்குமாடிக் குடியிருப்புகள் வீட்டு காய்கறித் தோட்டங்கள், அலங்காரச் செடிகளை வளர்ப்பவர்கள் இப்புதிய பாசன முறை தொழில்நுட்பம் மூலம் கடும் வெப்பம் மற்றும் மின்வெட்டு பிரச்னையில் இருந்து பாதுகாத்து குறைந்த செலவில், குறைந்த நீரைப் பயன்படுத்தி தங்களது தோட்டங்களைப் பாதுகாக்கலாம். அதிக மகசூலையும் பெறலாம் என்கிறார் முனைவர் தி.ராஜ்பிரவீண்.

## குமரி மாவட்ட மீனவர் கூட்டமைப்புக்கு நபார்டு வங்கி ரூ. 1.85 கோடி நிதி உதவி

கன்னியாகுமரி மாவட்ட மீனவர் கூட்டமைப்புக்கு நபார்டு வங்கி ரூ. 1.85 கோடி நிதி உதவி வழங்கியுள்ளது.இதுகுறித்து நபார்டு உதவி பொதுமேலாளர் ஆர். சங்கர் கூறியதாவது:இம்மாவட்ட மீனவர் கூட்டமைப்புக்கு நபார்டு வங்கி ரூ. 1.85 கோடி நிதி உதவி அளித்துள்ளது. இந்த நிதி மூலம் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு தேவையான மீன்பிடி உபகரணங்கள் மற்றும் நடைமுறை செலவினங்களுக்கு கடன்கள் வழங்கும்.

இத்திட்டத்தில் ரூ. 1.85 கோடி கடனாகவும், ரூ. 5.10 லட்சம் கூட்டமைப்புக்கு கணினி மற்றும் மென்பொருள் வாங்க அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் நல்ல முறையில் செயல்படும் வேளாண் மற்றும் வேளாண்சாரா உற்பத்தியாளர் கூட்டமைப்புகள் தங்களது வணிக திட்டங்களை செயல்படுத்தி நிதியை பயன்படுத்தலாம்.227 மீனவர்களுக்கு ரூ. 1 கோடிக்கான கடன் காசோலைகளை மாவட்ட ஆட்சியர் எஸ். நாகராஜன் வழங்கினார்.நிகழ்ச்சியில் ஐ.ஓ.பி. முதுநிலை மண்டல மேலாளர் ஏ.வி. பத்மராகம், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் என். கஜேந்திரநாதன், கனரா வங்கி முதன்மை மேலாளர் ஏ.பி. ஜனார்த்தனன், தணிக்கையாளர் ஆரோக்கியசாமி, மீனவர் கூட்டமைப்பு ஆலோசகர் வி. விவேகானந்தன், தலைவர் எஸ். மரியஜான், தென்னிந்திய மீனவர் சங்க கூட்டமைப்பு தலைவர் எஸ். அந்தோனி அடிமை ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தரம் குறைந்த விதைகளின் விற்பனையைத் தடுக்க நடவடிக்கை'

விதை ஆய்வுப் பிரிவில் தரம் குறைவான விதைகளின் விற்பனையைத் தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக விருதுநகர் விதை ஆய்வு துணை இயக்குநர் நாராயணபிரசாத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

விதையின் தரத்தைப் பரிசோதிப்பது, விதை ஆய்வுப் பிரிவின் பணியாகும். ஒவ்வொரு விதை ஆய்வாளர்களும் அவர்களது எல்கைக்குள்பட்ட பகுதிகளில் உள்ள அரசு, அரசு சார்பு மற்றும் தனியார் விதை விற்பனை நிலையங்கள், விதை விநியோகஸ்தர்கள், விதை உற்பத்தியாளர்கள், விதை சுத்திகரிப்பு நிலையங்கள் ஆகியவற்றில் இருப்பு வைத்துள்ள விதைகளை தொடர்ந்து ஆய்வு செய்து மாதிரிகள் அனுப்பி முளைப்புத் திறன் பரிசோதித்து தரமான விதைகள் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நடப்பாண்டில் தூத்துக்குடி மாவட்டத்தில் பல்வேறு பயிர்களில் 1,365 விதை மாதிரிகள் எடுக்கப்பட்டதில் 100 மாதிரிகள் இனத் தூய்மை பரிசோதனைக்காகவும், 90 மாதிரிகள் நச்சுத் தன்மை பரிசோதனைக்காகவும், 1,175 மாதிரிகள் முளைப்புத் திறன் பரிசோதனைக்காகவும் உரிய ஆய்வகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

694 விதை விற்பனை நிலையங்களில் ஆய்வுகள் மேற்கொண்டு குறைபாடுகள் காணப்பட்ட விற்பனை நிலையத்தின் உரிமம் ஒரு மாத காலத்துக்கு நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

உரிமம் இல்லாத இடங்களில் விதை விற்பனை செய்வது, விதை விற்பனை செய்பவர்களுக்கு துணை போவது, ஆதாரமற்ற விதைகள் விற்பனை செய்வது, தரம் நிர்ணயம் செய்யப்படாத விதைகள் விற்பனை செய்வது, விவசாயிகளுக்கு விற்பனை பட்டியலில் வழங்காமல் விற்பனை செய்வது, இதர இருப்பு ஆவணங்கள் முறையாக பராமரிக்கப்படாமல் விற்பனை செய்வது போன்றவை விதைகள் சட்டம் 1966 மற்றும் விதைகள் கட்டுப்பாட்டு ஆணை 1983-ன் படி தண்டனைக்குரிய குற்றங்களாகும்.

தவறுகள் ஏற்படாத வண்ணம் தீவிரமாக விதை விற்பனை நிலையங்களை குழு ஆய்வு மூலம் திடீர் ஆய்வு செய்வது உள்ளிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மண்ணில் குறைவான பி.எச். அளவு: நாளை சர்வதேச கலந்துரையாடல் மாநாடு தொடக்கம்

பெங்களூர் வேளாண் அறிவியல் பல்கலைக்கழகம் சார்பில், பெங்களூரில் மண்ணில் குறைவான பி.எச். அளவு குறித்த சர்வதேச கலந்துரையாடல் மாநாடு வியாழக்கிழமை நடைபெற உள்ளது.

பெங்களூரில் செவ்வாய்க்கிழமை, வேளாண் அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் கே.நாராயணகௌடா செய்தியாளர்களிடம் கூறியது: விவசாயத்தில் நல்ல மகசூலைப் பெற, மண்ணின் பி.எச். அளவு, அம்மண்ணில் பயிரிடப்படும் பயிர்களுக்கு ஏற்ப சரியான அளவில் இருக்க வேண்டும். இல்லாவிட்டால், மகசூலை பாதிக்கும். இந்தியாவில் மண்ணின் பி.எச். அளவு குறைவாக இருக்கும் மாநிலங்களில் அருணாச்சலபிரதேசம் முன்னணியில் உள்ளது. கர்நாடக மாநிலத்தில், கடலோரப் பகுதிகள் மற்றும் மலைப் பகுதிகளில் உள்ள மண்ணில் பி.எச். அளவு குறைவாக உள்ளது. இப்பிரச்னைகளுக்கு உலகலாவிய தீர்வு காணும் விதமாக, இப்பல்கலைக்கழகத்துடன், அமெரிக்கை வேளாண் பல்கலைக்கழகத்தை சேர்ந்த மண்ணில் பி.எச். அளவு குறைவை மாற்றுவதற்கான சர்வதேச குழு மற்றும் இந்திய மண் அறிவியல் சங்கம் ஆகியவை இணைந்து, மண்ணில் குறைவான பி.எச். அளவு குறித்த சர்வதேச கலந்துரையாடல் மாநாட்டை அக்டோபர் 18-ம் தேதி நடத்துகிறது. இதில் அமெரிக்கை வேளாண் பல்கலைக்கழகத்தை சேர்ந்த மண்ணில் பி.எச். அளவு குறைவை மாற்றுவதற்கான சர்வதேச குழுவின் தலைவர் வி.கோசியன், இந்திய வேளாண் அறிவியல் கழக முன்னாள் தலைவர் கீர்த்தி சிங் ஆகியோர் பங்கேற்று மாநாட்டை தொடக்கி வைக்கின்றனர்.

இந்த மாநாடு, 18-ம் தேதி, காலை 10 மணிக்கு, குவெம்பு அரங்கத்தில் தொடங்குகிறது. இது அக்டோபர் 22-ம் தேதி வரை 5 நாள்களுக்கு நடைபெறுகிறது. இதில் மண்ணில் பி.எச். அளவை உயர்த்துவதில் உள்ள பிரச்னைகள் மற்றும் எதிர்நோக்கியுள்ள சவால்கள், அத்தகைய மண்ணில்

சாகுபடி செய்யக்கூடிய பயிர்கள் உள்ளிட்டவை குறித்து நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து வரும் வேளாண் வல்லுநர்கள் கலந்துரையாட உள்ளனர் என்றார்.

**மழைநீரை நீர்நிலைகளில் தேக்கிட விவசாயகள் கூட்டுமுயற்சி: வானிலை ஆராய்ச்சி மையம் அறிவுரை**

விளைநிலங்களில் உள்ள கிணறுகள், ஆழ்துளை கிணறுகளின் நீர்மட்டம் உயர்ந்திட தற்போது பெய்து வரும் முன்பருவ மழைநீரை குளம், குட்டை உள்ளிட்ட நீர்நிலைகளில் தேக்கிட அனைத்து விவசாயிகளும் கூட்டு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்று நாமக்கல் வானிலை ஆராய்ச்சி மையம் அறிவுறுத்தியுள்ளது.

இதுகுறித்து அம்மையம் செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள செய்தி:
நாமக்கல் மாவட்ட வானிலையில் வரும் 3 நாட்களுக்கு (அக்.17 முதல் அக்.19 வரை) வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் பல இடங்களில் 10 முதல் 11மிமீ வரை மழை காணப் படும். காற்றின் திசை வேகம் மணிக்கு 3 கிமீ முதல் 5 கிமீ வரை மேற்கு மற்றும் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும். வெப்பநிலை குறைந்தபட்சம் 22 டிகிரி செல்சியஸ் முதல் அதிகபட்சம் 33 டிகிரி செல்சியஸ் வரையும், காற்றின் ஈரப்பதம் குறைந்தபட்சம் 60 சதம் முதல் அதிகபட்சம் 90 சதம் வரை காணப்படும்.

கோழிப்பண்ணையாளர்களுக்கு...
வடகிழக்குப் பருவமழைக்கு சாதகமான வானிலை தோன்றி மழை பெய்து வருவதால் மழைச் சாரலிலும், காற்றிலும் கோழிகள் மற்றும் தீவனங்கள் நனையாமல் பாதுகாத்திட பண்ணை யாளர்கள் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். பகல் வெப்பம் இனி குறையத் தொடங்கும் என்பதால் கோழிகளின் தீவன எடுப்பு படிப்படியாக உயரக்கூடும். உலர்ந்த தீவனம் மற்றும் பூஞ்சான நச்சு குறைந்த மூலப்பொருட்களை பயன்படுத்துவது நல்ல உற்பத்தியை அளிக்கும்.

வேளாண் விவசாயிகளுக்கு..:
வடகிழக்குப் பருவமழை தொடங்க உள்ள நிலையில் அனைத்து இடங்களிலும் முன்பருவ மழை பெய்து வருகிறது. மழை நீரை குளம், குட்டை போன்ற நீர் ஆதார நிலைகளில் தேக்கிட அனைத்து விவசாயிகளும் கூட்டு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். வீணாக நீர் வெளியேறுவதை தடுத்து அவற்றை முறையாக நீர்த்தேக்கங்களில் தேக்குவதால் விளை நிலங்களில் உள்ள கிணறு, ஆழ்துளை கிணறுகளின் நீர்மட்டம் உயரக்கூடும். எனவே, மழைநீர் வழித்தடங்களில் காணப்படும் தூர்களை நீக்கி மழைநீரை தேக்கி வைப்பதற்கான நடவடிக்கைகளை தீவிரப்படுத்திட வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அக்.19 -ல் இலவச கால்நடை திறன் மேம்பாட்டு பயிற்சி நிறைவு விழா

புதுக்கோட்டையிலுள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழக மண்டல ஆராய்ச்சி மையத்தில் இலவச கால்நடை திறன் மேம்பாட்டு பயிற்சி முகாம் நிறைவு விழா வரும் வெள்ளிக்கிழமை நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அம்மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவருமான பி.என். ரிச்சர்டுஜெகதீசன் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

புதுக்கோட்டை, மச்சுவாடி, அண்டக்குளம் சாலையில் இயங்கிவரும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக மண்டல ஆராய்ச்சி மையத்தில் உள்ள கால்நடை அறிவியல் பல்தொழில்நுட்ப மையம் மூலம் நடைபெற்ற இலவச கால்நடை திறன் மேம்பாட்டு பயிற்சி நிறைவு விழா வரும் 19.10.2012 காலை 10.30 மணியளவில் இவ்வாளகத்தில் நடைபெற உள்ளது. இதில் பல்கலைக்கழக இயக்குநர்கள் பங்கேற்று பயனாளிகளுக்கு இடுபொருள்கள் மற்றும் பயிற்சி சான்றிதழ்களை அளிக்கவுள்ளனர். மேலும் விவரங்களுக்கு 04322-271443 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என அதில் தெரிவித்துள்ளார்.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்
18.10.2012 A.M

## உழவர் பாதுகாப்பு திட்டத்தில் 25 பேருக்கு ரூ.25 லட்சம் நிவாரணம்: அமைச்சர் வழங்கல்

தஞ்சாவூர்: உழவர் பாதுகாப்பு திட்டத்தின்கீழ், 25 பயனாளிகளுக்கு விபத்து நிவாரணத்தொகையாக, 25 லட்சத்து, 12 ஆயிரத்து, 500 ரூபாயை அமைச்சர் வைத்திலிங்கம் வழங்கினார்.

தஞ்சை மாவட்டத்தில், 2008, 2009 மற்றும், 2010ம் ஆண்டுகளில் விபத்தில் மரணம் அடைந்த விவசாயிகளின் வாரிசுதாரர், விபத்தால் உடல் உறுப்புகளை இழந்தவர்கள் ஆகியோரில், அரசு நிர்ணயித்த காலத்துக்கு மேல் விண்ணப்பித்த விவசாய தொழிலாளர்களின், மனுக்களை முதல்வர் ஜெ., பரிசீலனை செய்தார். இதையடுத்து உழவர் பாதுகாப்பு திட்டத்தில் விபத்து நிவாரணத்தொகையாக, 25 லட்சம் ரூபாயை வழங்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.இதன்படி, தஞ்சை மாவட்டத்தில் காலம் கடந்து மனு செய்த, 25 பயனாளிகளுக்கு, 25 லட்சத்து, 12 ஆயிரத்து 500 ரூபாய் நிவாரணத்தொகையை, தஞ்சையில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் வைத்திலிங்கம் வழங்கினார்.தஞ்சை தாலுகாவில், ஒருவருக்கு, 50 ஆயிரம் ரூபாயும், திருவையாறு தாலுகாவில், ஒன்பது பேருக்கும், ஒரத்தநாடு தாலுகாவில், ஐந்து பேருக்கும், பாபநாசம் தாலுகாவில், இருவருக்கும், பட்டுக்கோட்டை தாலுகாவில், மூன்று பேருக்கும், பேராவூரணி தாலுகாவில், இரண்டு பேருக்கும் என, தலா, ஒரு லட்சத்து, இரண்டாயிரத்து, 500 ரூபாய் வீதம், மொத்தம், 25 லட்சத்து, 12 ஆயிரத்து, 500 ரூபாயை அமைச்சர் வழங்கினார்.நிகழ்ச்சியில் கலெக்டர் பாஸ்கரன், எம்.எல்.ஏ., ரங்கசாமி, நகராட்சி தலைவர் சாவித்திரி, துணைத்தலைவர் மணிகண்டன், கமிஷனர் ரவிச்சந்திரன், சமூக நல பாதுகாப்பு திட்ட தனித்துணை தாசில்தார் சகுந்தலா, கவுன்சிலர்கள் சாமிநாதன், சண்முகபிரபு, பூபதி உள்பட பலர் பங்கேற்றனர்.

## டெல்டா மாவட்டத்தில் மழையால் வாடிய பயிர்கள் "பிழைக்க' வாய்ப்பு

திருவாரூர்: மாவட்டத்தில் நேற்று முதல் வடகிழக்கு பருவமழை பெய்யத்துவங்கியுள்ளதால், தண்ணீரின்றி வாடிய நெற்பயிர்கள் உயிர் பிடிக்கும் எனும் நம்பிக்கையில் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.கர்நாடகா மாநிலத்திலிருந்து தமிழகத்துக்கு தரவேண்டிய காவிரி நீர் பங்கீட்டு அளவை, நடப்பாண்டு தர அம்மாநில அரசு மறுத்ததால், டெல்டா பாசன விவசாயிகள் கவலையில் ஆழ்ந்தனர். திருவாரூர் மாவட்டத்தில் நேரடி நெல் விதைப்பில், 68 ஆயிரம் ஹெக்டரிலும், நடவு மூலம், எட்டாயிரம் ஹெட்டேரிலும் சாகுபடி பணிகள் தற்போது நடந்து வருகிறது.ஏற்கனவே நேரடி நெல்விதைப்பில் சாகுபடி செய்திருந்த பயிர்கள் தண்ணீரின்றி கருகிய நிலையில் காணப்படுகிறது. இதை கடந்த சில தினங்களுக்கு முன் வந்த மத்திய நீர்ப்பாசன நிபுணர் குழுவினரும் நேரில் பார்வையிட்டனர்.தமிழகத்தில், வடகிழக்கு பருவமழை நேற்று முதல் கடலோர மாவட்டங்களில் முதலில் துவங்கி, அதன்பின்னர் தமிழகம் முழுவதும் அனைத்து பகுதிகளிலும் பெய்யும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.இதன்படி, திருவாரூர் மாவட்டத்தில் அனைத்து பகுதிகளிலும் நேற்று பலத்த மழை பெய்தது. இதனால், கருகிய பயிர்களை காப்பாற்றும் ஏக்கத்திலிருந்த விவசாயிகள், பெரும் மகிழ்ச்சியடைந்தனர். மேலும், தமிழ் மாதமான ஐப்பசி மாதம், முதல் தேதியில் மழை பெய்தால், அந்த மாதம் முழுவதும் மழை பெய்யும் என்பது ஐதீகம். அதன்படி நேற்று பெய்த மழை, தொடர்ந்து பெய்யும் என விவசாயிகள் நம்புகின்றனர்.* தஞ்சை நகரில் நேற்று மதியம், 1.30 மணிக்கு லேசான தூறல் மழை பெய்தது. தொடர்ந்து இரண்டு மணி நேரத்துக்கு மேல், விட்டு விட்டு, தூறல் மழை பெய்தது. வானத்தில் மேகமூட்டங்கள் மூண்டது.இதனால், வெய்யில் இல்லாததால் நகர வீதிகளில் மக்கள் வாகனங்களிலும், நடந்தும் மகிழ்ச்சி பொங்கச்சென்றனர். தொடர்ந்து மாலை, 5.30 மணிக்கும் மீண்டும் லேசான மழை பெய்தது. இதனால் நிலவிய இதமான சூழலை தஞ்சை மக்கள் மகிழ்ச்சியுடன் நேற்று அனுபவித்தனர்.

## பெரியாறு அணை நீர்மட்டம்120 அடியை எட்டியது

கூடலூர்:தொடர் மழையால், பெரியாறு அணை நீர்மட்டம், 120 அடியை எட்டியது. பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதியில், தொடர்ந்து மழை பெய்து வருகிறது. கடந்த மூன்று நாட்களில், பெரியாறு அணை நீர்மட்டம், 3 அடி உயர்ந்து, நேற்று காலை நிலவரப்படி, 120 அடியாக இருந்தது. அணைக்கு நீர்வரத்த 1646 கன அடியாக இருந்தது. தமிழகப்பகுதிக்கு திறக்கப்படும் நீர், சற்று அதிகரித்து 600 கன அடியாக இருந்தது. நீர் இருப்பு 2628 மில்லியன் கன அடியாகும்.

தொடர்ந்து நீர்பிடிப்பு பகுதியில், மழை பெய்து வருவதால், அணையின் நீர்மட்டம் மேலும் உயரும் வாய்ப்புள்ளது.மழையளவு (மி.மீ.,): பெரியாறு- 7.6, தேக்கடி- 17.2, கூடலூர் -25, வீரபாண்டி- 43, உத்தமபாளையம் -25, சண்முகாநதி -40, வைகை அணை-16.

## வைகை அணையில்நீர்மட்டம் உயர்வு

ஆண்டிபட்டி: பெரியாறு அணை நீர் பிடிப்பு பகுதியில் போதுமான மழை பெய்யாததால், வைகை அணைக்கு அதிகப்படியான நீர் வரத்து ஏற்படவில்லை. இதனால் அணை நீர் மட்டம் 37.83 அடியாக மட்டுமே உள்ளது. கடந்த ஆண்டு இதே நாளில் அணை நீர் மட்டம் 51.48 அடியாக இருந்தது. (அணை மொத்த உயரம் 71 அடி). கடந்த சில நாட்களாக வைகை அணை நீர் பிடிப்பு பகுதிகளில் தொடர்ச்சியான மழை பெய்து வருகிறது. இதனால் அணைக்கான நீர் வரத்து அதிகரித்துள்ளது. நேற்று காலை அணைக்கான நீர் வரத்து, வினாடிக்கு 1961 கன அடியாக இருந்தது. அணையில் இருந்து மதுரை, சேடபட்டி-ஆண்டிபட்டி குடிநீருக்காக ,வினாடிக்கு 60 கன அடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது. தாமதமான மழை பெய்தாலும், வைகை அணைக்கான நீர் வரத்து சற்று அதிகரித்து வருவது விவசாயிகளுக்கு ஆறுதல் அளிப்பதாக உள்ளது

## கடையம் பகுதியில் மானிய விலையில் நெல், உளுந்து விதைகள் வினியோகம்

தென்காசி : கடையம் வட்டாரத்தில் மானிய விலையில் நெல், உளுந்து விதைகள் வினியோகம் செய்யப்படுகிறது.இதுகுறித்து கடையம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ராஜசேகர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: ""கடையம் மற்றும் ஆழ்வார்குறிச்சி வேளாண்மை விரிவாக்க மையங்களில் நடப்பு பிசான பருவத்திற்கேற்ற உயர் விளைச்சல் நெல் ரகங்களான சாவித்திரி (சி.ஆர்.1009), ஆடுதுறை-39, அம்பை-16 விதைகள் கிலோவிற்கு 5 வீதம் மானியத்தில் நெல் ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மானாவாரியில் ஐப்பசி பட்டத்தில் விதைக்க ஏற்ற உளுந்து வம்பன்-3, டி.எம்.வி-1 ரக விதைகள் கிலோவிற்கு 20 ரூபாய் மானியத்தில் தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தில் (பயறு) விவசாயிகளுக்கு வினியோகிக்கப்படுகிறது. நெல் பயிருக்கு ஏற்ற நெல் நுண்ணூட்ட உரம், ஜிப்சம், உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போ பாக்டீரியா போன்ற முக்கியமான இடு பொருட்களும் வழங்கப்பட்டு வருகிறது. கடையம் வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகள் விதை மற்றும் இதர இடு பொருட்களை மானிய விலையில் பெற்று பயன்பெறலாம்'' என வேளாண்மை இணை இயக்குநர் ராஜசேகர் அறிக்கையில் கூறியுள்ளார்.

## நொய்யல் ஆற்றில் வெள்ளப் பெருக்கு:சாயக்கழிவு நீரால் விவசாயிகள் அதிர்ச்சி

சென்னிமலை: நொய்யல் ஆற்றின் குறுக்கே ஒரத்துப்பாளையத்தில் ஈரோடு, கரூர் மாவட்ட விவசாயிகள் பயன் பெற, 1996ம் ஆண்டு, 423 எக்டேரில், 40 அடி கொள்ளளவில் கட்டப்பட்ட அணை, தற்போது திருப்பூர் பகுதியில் இருந்து வரும் பின்னலாடை சாய கழிவுநீர் தேங்கி காணப்படுகிறது.அணையின் நீர் தொடர்ந்து வெளியேற்றப்படுவதால், பெரும்பாலான காலம் அணை வறண்டு காணப்படும். தற்போது மேற்கு தொடர்ச்சி மலை பகுதியான வெள்ளியங்கிரி மலைப்பகுதியில் அதிக மழை பெய்வதால், நொய்யல் ஆற்றில் பெரும் வெள்ள பெருக்கு ஏற்பட்டு, ஒரத்துப்பாளையம் அணை நீர் நேற்று காலை நிலவரபடி, 50 கனஅடிக்கு மேல் வருகிறது. மழை, வெள்ளம் இருந்தாலும் அணையில் தற்போது தேங்கி நிற்கும் தண்ணீர், சாய கழிவு நீர் போல காட்சி அளிக்கிறது.நீதிமன்ற உத்தரவுப்படி, இந்த அணையில் நீர் தேக்கி வைக்கக்கூடாது என்ற விதி உள்ளதால், நான்கு மதகுகள் வழியாக அதிகப்படியான தண்ணீர் வெளியேறி வருகிறது. இந்த நீர் காவிரில் கொடுமுடி அருகே கலக்கிறது. அணையில் இருந்து வினாடிக்கு, 65 கனஅடி வெளியேற்றப்படுகிறது. தற்போது அணையில் நான்கு அடி மட்டும் உள்ளது. இதை முழுமையாக வெளியேற்ற அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.தற்போது அணைக்கு வரும் நீர், சாயகழிவு கலந்து கருப்பு நிறத்தில் வருகிறது. இதனால், நொய்யல் ஆற்றுப்படுகை விவசாயிகளுக்கு பெரும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.திருப்பூர் பகுதியில் பின்னலாடை சாயப்பட்டறைகளில் கழிவு நீரை, சுத்தம் செய்யாமல் வெளியேற்ற கூடாது, என மாசுகட்டுபட்டு வாரியத்துக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. திருப்பூரில் கடுமையாக அதிகாரிகள் சோதனை நடத்தி, பல சாயப்பட்டறைகளை மூடி விட்டனர் என கூறி வரும் நிலையில், நொய்யல் ஆற்றில் மழைநீர், சாயக்கலரில் வருவது மக்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது.நொய்யல் ஆற்று நீர், காவிரியிலும் கலப்பதால், கரூர், நாமக்கல், திருச்சி மாவட்ட மக்கள் இந்த குடிநீரை பயன்படுத்த அச்சம் அடைந்துள்ளனர்.

## பதநீர் உற்பத்தி குறைவால் கருப்பட்டி விலை உயர்வு

கோபிசெட்டிபாளையம்: தென்னை கருப்பட்டி விலை உயர்ந்துள்ளதால் கருப்பட்டி உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கடந்தாண்டை விட நடப்பாண்டு, 10 கிலோவுக்கு, 420 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.ஈரோடு மாவட்டம் கோபி பகுதிக்குட்பட்ட அயலூர், மல்லிபாளையம், நரிக்குட்டை, அலையபாளையம், சன்னகுழி, பாலபாளையம், கோசனம், தாழ்குளி, கொளப்பலூர், தீர்த்தாம்பாளையம், கெட்டிசெவியூர், நம்பியூர் மற்றும் குன்னத்தூர்

பகுதிகளில் அதிகளவில் பனை மரங்கள் உள்ளன. பனை மரத்தில் இருந்து கிடைக்கும் பதனீரை கொண்டு பனைவெல்லம் எனும் கருப்பட்டி தயாரிக்கப்படுகிறது. கோபி சுற்று வட்டாரத்தில் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, எல்.பி.பி., வாய்க்கால் பாசனம் காரணமாக தென்னை மரங்கள் அதிகளவில் உள்ளதால் பனை கருப்பட்டி அடுத்ததாக தென்னை கருப்பட்டி உற்பத்தியும் அதிகளவில் உள்ளது.பனை கருப்பட்டி மற்றும் தென்னை கருப்பட்டி உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்கள் சிறுவலூர் மற்றும் குன்னத்தூர் கூட்டுறவு கருப்பட்டி உற்பத்தியாளர் சங்கத்தில் விற்பனை செய்கின்றனர். கடந்த ஆண்டு மே மாதம், 10 கிலோ கொண்ட தென்னை கருப்பட்டி, 350 முதல், 420 ரூபாய் விற்பனையானது. நடப்பாண்டு இவ்விலை, 10 கிலோ, 840 ரூபாயாக உயர்ந்துள்ளது. நடப்பாண்டு பருவ மழை பொய்த்ததால் கடுமையான வறட்சி நிலவுகிறது. தென்னை மரங்களில் குறைந்தளவு பதநீர் கிடைப்பதால் உற்பத்தி குறைந்து விட்டது. பண்டிகை சீஸன் துவங்கியுள்ள நிலையில் உற்பத்தி குறைவதால் கருப்பட்டி விலை இரு மடங்களாக உயர்ந்துள்ளது, உற்பத்தியாளர்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.தென்னை கருப்பட்டி உற்பத்தியாளர்கள் கூறியதாவது: தென்னை மற்றும் பனை மரங்களை குத்தகைக்கு எடுக்கிறோம். பதனீர் இறக்கி கருப்பட்டியாக உற்பத்தி செய்கிறோம். இரண்டு குடம் பதனீர் சூடேற்றி பதப்படுத்தினால் ஒரு கருப்பட்டி கிடைக்கும். தென்னை மற்றும் பனை கருப்பட்டி சீஸன் நேரத்தில் சிறுவலூர், குன்னத்தூர் சொசைட்டிகளுக்கு தென்னை கருப்பட்டி, 8,000 கிலோவும், பனை கருப்பட்டி, 5,000 கிலோவும் வரத்தாகும். நடப்பாண்டு பருவ மழை பொய்த்ததால் சொசைட்டிகளுக்கு, 2,500 கிலோ மட்டுமே வரத்தாகிறது.சென்ற ஆண்டு தென்னை கருப்பட்டி, 10 கிலோ, 350 முதல், 420 ரூபாய்க்கு விற்பனையானது. நடப்பாண்டு, 10 கிலோ கருப்பட்டி, 840 ரூபாய்க்கு விற்பனையாகிறது. கருப்பட்டி விலை உயர்ந்துள்ளதால் வியாபாரிகள் வாங்க தயக்கம் காட்டுகின்றனர். சென்ற ஆண்டை விட நடப்பாண்டு கருப்பட்டி விலை நன்றாக உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## சொட்டு நீர் பாசனம் மூலம் காலிபிளவர் சாகுபடி தீவிரம்

கோபிசெட்டிபாளையம்: கோபி சுற்று வட்டாரத்தில் பாசனப்பகுதியில் தண்ணீர் இன்றி, கிணறு பாசனத்தில் சொட்டு நீர் மூலம் காலிபிளவர் சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.கோபி சுற்று வட்டாரத்தில் உள்ள பாசனப்பகுதியில் பல ஆண்டுகளாக நெல், கரும்பு மற்றும் மஞ்சள் பயிரிட்டு வந்தனர். ஆட்கள் பற்றாகுறை, மின்தடை, உரம் விலை உயர்வு போன்ற பிரச்னையால் விவசாயிகள் மாற்று பயிருக்கு மாறி வருகின்றனர்.கோபி பகுதிகளில் குறைந்த நாளில் அதிக

லாபம் தரக்ககூடிய மற்றும் விவசாய கூலி ஆட்கள் அதிகம் தேவைப்படாத தோட்டக்கலை பயிர்களுக்கு விவசாயிகள் முக்கியத்துவம் தர தொடங்கியுள்ளனர். தினமும் உணவில் பயன்படுத்தும் கத்தரிக்காய், முள்ளங்கி, வெண்டைக்காய் மற்றும் காலிப்பிளவர் போன்ற பயிர்கள் கோபி பகுதியில் சமீப காலமாக அதிகளவில் பயிரிடப்பட்டு வருகின்றனர்.கோபி, நம்பியூர், கடத்தூர், சிறுவலூர், கள்ளிப்பட்டி, துறையம்பாளையம், அத்தாணி, அரசூர், பாரியூர், வெள்ளாங்கோயில், பங்களாப்புதூர், குருமந்தூர், கொளப்பலூர், லக்கம்பட்டி போன்ற பகுதிகளில் விளையும் காய்கறிகளை மொடச்சூர் உழவர் சந்தை மற்றும் கோபி தினசரி மார்க்கெட்டில் தினமும் விற்பனை செய்யப்படுகிறது.கோபி மார்க்கெட்டுக்கு ஊட்டியில் இருந்து காலிபிளவர் வரத்தாகிறது. கோபி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் சொட்டு நீர் பாசனத்தில் காலிபிளவர் சாகுபடி செய்யப்படுகிறது. ஊட்டியில் சாகுபடி செய்யப்படும் காலிபிளவர், 15 முதல், 20 ரூபாய் வரையிலும், கோபி பகுதிகளில் அறுவடை செய்யப்பட்டுள்ள காலிப்பிளவர், 10 முதல், 15 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது.கோபி பகுதிகளில் தோட்டக்கலை பயிர்கள் அதிகளவில் பயிரிடப்பட்டு விற்பனைக்கு கொண்டு வரப்படுவதால், வியாபாரிகள் வெளி மாவட்டத்தை நம்பியிருக்க வேண்டிய நிலை இல்லை. உள்ளூரில் விளையும் கத்தரிக்காய் உள்ளிட்ட காய்கறிகளை பொதுமக்களும் தினமும் "ஃபிரஷ்ஷாக' வாங்கி செல்கின்றனர்.

## கால்நடை சிறப்பு மருத்துவ முகாம்

கரூர்: லிங்கமநாயக்கன்பட்டியில் நடந்த சிறப்பு கால்நடை மருத்துவமுகாமில், 1,308 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி பஞ்சாயத்து யூனியன் லிங்கம நாயக்கன்பட்டியில் சிறப்பு கால்நடை பாதுகாப்பு முகாம் நடந்தது. முகாமில், பசு மற்றும் எருமைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது. குடற்புழு நீக்கல், கருவூட்டல், மலடு நீக்கல், சினை பரிசோதனை உள்ளிட்ட சிகிச்சைகள், 1,308 கால் நடைகளுக்கு அளிக்கப்பட்டது.பஞ்சாயத்து தலைவர் தங்கராஜ், மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் குழந்தைசாமி, கால்நடை டாக்டர்கள் சுமதி, நாகராஜன், கால்நடை ஆய்வாளர் தாமோதரன், பராமரிப்பு உதவியாளர் பிச்சை உட்பட பலர் பங்கேற்றனர்.

## விவசாயிகள் நலனுக்கு உழவர் சந்தை மாவட்ட நிர்வாகத்துக்கு கோரிக்கை

க.பரமத்தி: "விவசாயிகளின் நலன் கருதி க.பரமத்தி பகுதியில் உழவர் சந்தை அமைக்க யூனியன் நிர்வாகம் முன்வர வேண்டும்' என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.கரூர் மாவட்டம், க.பரமத்தி மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளான முன்னூர், குப்பம், பவுத்திரம்,

காருடையாம்பாளையம், ஆரியூர், நெடுங்கூர், அத்திப்பாளையம் உள்ளிட்ட, 10க்கும் மேற்பட்ட பஞ்சாயத்துகளில், ஏராளமானோர் விவசாயம் செய்து வருகின்றனர்.இவர்களின் நிலங்களில் விளைவித்த முருங்கை காய், தக்காளி, அவரைக்காய், கத்திரிக்காய், வெண்டைக்காய் உள்ளிட்ட காய்கள், நாள்தோறும் சாகுபடி செய்யப்படுகிறது. காய்களை க.பரமத்தியில் செவ்வாய்தோறும் கூடும் வாரச்சந்தையில் மட்டும் விற்பனை செய்யும் வரை அவற்றை பாதுகாப்பது மிகவும் கடினம். இதனால் அப்பகுதியிலுள்ள, நூற்றுக்கணக்கான விவசாயிகள் பஸ்ஸில், காய்கறிகளை ஏற்றிவந்து, கரூர் உழவர் சந்தையில் விற்று வருகின்றனர்.ஆனால் சில நாட்களில் போதிய விலை கிடைக்காமல் விவசாயிகள் நஷ்டத்துக்கு ஆளாகும் நிலை உள்ளது. மேலும், க.பரமத்தி மற்றும் சுற்றுப்புற பகுதியில் வசிக்கும் பொதுமக்கள், பொதுநிகழ்ச்சி மற்றும் வீட்டு விசேஷங்களுக்கு கரூர் சென்று கூடுதல் விலை கொடுத்து காய்கறிகளை வாங்க வேண்டியுள்ளது.எனவே, க.பரமத்தி பகுதியில் விளையும் காய்கறிகளை, அப்பகுதி மக்கள் நாள்தோறும் வாங்க வசதியாகவும், விவசாயிகளுக்கு எளிதாக விற்பனை ஆகவும், க.பரமத்தியில் உழவர் சந்தை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என, அப்பகுதியினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம் நாளை நடப்பு

புதுக்கோட்டை: மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் நாளை நடக்கிறது.புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நாளை காலை, 10.30 மணிக்கு நடக்கிறது. கலெக்டர் மனோகரன் தலைமையில் நடக்கும் கூட்டத்தில், அரசுத்துறை அதிகாரிகள் பலர் பங்கேற்று விவசாயம் தொடர்புடைய கோரிக்கைகளுக்கு பதிலளிக்க உள்ளனர். கோரிக்கைகளுக்கு தீர்வுகாண விரும்பும் விவசாயிகள் கூட்டத்தில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## விவசாயிகள் சங்க மாநாடு தீர்மானங்கள் நிறைவேற்றம்

கந்தர்வக்கோட்டை: விவசாயிகள் சங்கத்தின் ஒன்றிய மாநாட்டில், கரும்பு டன்னுக்கு, மூவாயிரம் வழங்கவேண்டும் என்பது உள்பட, பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.கந்தர்வக்கோட்டையில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின், 11வது ஒன்றிய மாநாடு நடந்தது. இதில், ஒன்றிய தலைவர் சுப்பிரமணியன் தலைமை வகித்தார். விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் பொன்னுசாமி முன்னிலை வகித்தார். வேலையறிக்கையை, விவசாய சங்க ஒன்றிய செயலாளர் வீராச்சாமி வாசித்தார்.மாநாட்டில், தமிழ்நாட்டில் மழை பாதிப்பு, கர்நாடகா அரசின் போக்கு ஆகியவற்றால், அடியோடு விவசாயம் அழிந்து விடும் சூழல்

ஏற்பட்டுள்ளது. இதை தடுக்க தமிழகத்துக்கு தடையில்லா மின்சாரம் வழங்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.புதுக்கோட்டை பகுதியில் வெகுவாக பரவி வரும் டெங்கு காய்ச்சலை தடுக்க, சுகாதாரத்துறை துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். நெல் குவிண்டாலுக்கு, இரண்டாயிரம் ரூபாய் விலை நிர்ணயித்து வழங்க வேண்டும். விவசாயிகளுக்கு நிலப்பட்டா வழங்கவும், கரும்பு டன்னுக்கு, மூவாயிரம் ரூபாய் வழங்க வேண்டும் உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.மாநாட்டில், விவசாய சங்க மாவட்டத்தலைவர் செபாஸ்டியான், மா. கம்யூ., வட்டக்குழு செயலாளர் ராமையன், விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் சங்கர் உள்பட பலர் பங்கேற்றனர்.

## உளுந்தூர்பேட்டை வாரச்சந்தையில்ரூ. 7 கோடிக்கு ஆடுகள் விற்பனை

உளுந்தூர்பேட்டை:உளுந்தூர்பேட்டை ஆட்டுச்சந்தையில் நேற்று 7 கோடி ரூபாய்க்கு விற்பனை நடந்தது.உளுந்தூர்பேட்டையில் நேற்று கூடிய வாரச்சந்தையில் பக்ரீத் பண்டிகையையொட்டி ஆடு விற்பனை விறுவிறுப்பாக நடந்தது. கடந்த 10ம் தேதி நடந்த சந்தையில் 3 கோடி ரூபாய் மதிப்பிலான ஆடுகள் விற்பனையானது.

நேற்றைய சந்தையில் உளுந்தூர்பேட்டை, எலவனாசூர்கோட்டை, விருத்தாசலம், பண்ருட்டி, திருநாவலூர், மடப்பட்டு உள்ளிட்ட பகுதிகளில் இருந்து ஆடுகள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன.நேற்று மட்டும் 7,300 ஆடுகள் விற்பனை செய்யப்பட்டதன் மூலம் 7 கோடி ரூபாய் வியாபாரம் நடந்தது. கடந்த வாரத்தைவிட இந்த வாரம் ஆடுகள் விற்பனை இரு மடங்கு உயர்ந்துள்ளது.நேற்றைய ஆட்டு சந்தை இடப்பற்றாக்குறையால் மாற்று இடத்தில் நடந்ததால் வியாபாரிகள் குழப்பமடைந்தனர்.பேரூராட்சி சார்பில் 8 லட்சம் ரூபாய்க்கு குத்தகை விடப்பட்டதுடன், இடம் தேர்வு செய்துகொடுக்காமல் அலட்சியமாக உள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

## உழவர் பாதுகாப்பு திட்டத்திற்கு கணக்கெடுப்பு ஆலோசனை

விழுப்புரம்:விழுப்புரம் பகுதியில் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உறுப்பினர்கள் கணக்கெடுப்பு குறித்த ஆலோசனைக் கூட்டம் நடந்தது.விழுப்புரம் தாலுகா அலுவலகத்தில் நடந்த கூட்டத்திற்கு ஆர்.டி. ஓ.,வின் நேர்முக உதவியாளர் ரவிகண்ணன் தலைமை தாங்கினார்.சமூக பாதுகாப்பு திட்ட தனி தாசில்தார் வெற்றிவேல், தேர்தல் பிரிவு துணை தாசில்தார் பாண்டுரங்கன், மண்டல துணை தாசில்தார்கள் பார்த்திபன், இளங்கோவன், ஜெயச்சந்திரன் முன்னிலை வகித்தனர்.உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் விவசாய குடும்ப தலைவர் மற்றும் குடும்ப

உறுப்பினர்களுக்கு எல்காட் மூலம் அடையாள அட்டைகள் வழங்கப்பட உள்ளது.இதற்காக கிராமங்களில் கணக்கெடுப்பு பணிகள் நடந்துள்ளது.

இதில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளை தவிர்த்து கணக்கெடுப்பை முழுமை படுத்த வேண்டும்.உழவர் பாதுகாப்பு அடையாள அட்டை வழங்க சொந்த நிலம் வைத்துள்ள விவசாயி, சிறு, குறு விவசாயி, விவசாய குடும்பத்தில் உள்ள உறுப்பினர்களை விபரமாக குறிப்பிட வேண்டும். விடுபட்ட நபர்களை சேர்க்க தொடர்ந்து கணக்கெடுப்பினை நடத்த வேண்டும். கணக்கெடுப்பினை விரைந்து முடித்து தகவல்களை வழங்க வேண்டுமென கூட்டத்தில் பங்கேற்ற அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

## ஆட்டுக்குட்டி பராமரிப்பு குறித்து இலவச பயிற்சி

நாமக்கல்: "நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும், 25ம் தேதி, மழைக்காலங்களில் ஆட்டுக்குட்டி பராமரிப்பு என்ற தலைப்பில், ஒரு நாள் இலவச பயிற்சி முகாம் நடக்க உள்ளது' என, ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து, அவர் வெளியிட்ட அறிக்கை:நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும், 25ம் தேதி, மழைக்காலங்களில் ஆட்டுக் குட்டிகள் பராமரிப்பு என்ற தலைப்பில், ஒரு நாள் இலவச பயிற்சி நடக்க உள்ளது. பயிற்சியில், வெள்ளாடு, செம்மறி ஆட்டுக் குட்டிகளில், மழைக்காலங்களில் வரும் பல்வேறு வகையான நோய், அதன் அறிகுறி, அதற்கான கட்டுப்பாடு ஆகியவை குறித்து, பயிற்சி அளிக்கப்பட உள்ளது.பயிற்சியில், விவசாயிகள் உட்பட அனைத்து தரப்பு மக்களும் பங்கேற்கலாம். இதில் பங்கேற்க விரும்புவோர், நாமக்கல்-மோகனூர் சாலையில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லாரி மருத்துவமனை ஆராயச்சி நிலைய வளாகத்தில் செயல்படும் வேளாண் அறிவியல் நிலையத்திற்கு நேரிலோ அல்லது, 04286 -266345, 266244 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு தங்களது பெயரை பதிவு செய்து கொள்ளலாம்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பால் பொருட்கள் ஏற்றுமதி மீதான கட்டுப்பாடு நீங்குகிறது



பால் பொருட்கள் ஏற்றுமதி மீதான கட்டுப்பாடுகளை, முழுமையாக நீக்குவது குறித்து, மத்திய கால்நடை துறை பரிசீலித்து வருகிறது.நாட்டின் பால் உற்பத்தி, உள்நாட்டுத் தேவையை விட அதிகரிக்கும் என்ற மதிப்பீட்டால், மேற்கண்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக கூறப்படுகிறது.

**ஏற்றுமதிக்கு தடை:**உள்நாட்டு பால் துறையை பாதுகாக்கும் பொருட்டு, மத்திய அரசு, சென்ற 2011ம் ஆண்டு, அனைத்து வகையான பால் பொருட்களின் ஏற்றுமதிக்கு தடை விதித்தது.இதன்படி, கொழுப்பு நீக்கப்பட்ட பால் பவுடர் உட்பட, அனைத்து வகை பால் பொருட்கள்,மொத்த பால் பவுடர், குழந்தைகளுக்கான பால், கேசின் மற்றும் கேசின் பொருட்கள், பால் பொருட்களை வெண்மையாக்கும் நிறமிகள் ஆகியவற்றின் ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்பட்டது.மேலும், பால்,சர்க்கரை சேர்க்கப்பட்ட அடர்த்தியான கிரீம் மற்றும் இனிப்பளிக்கும் பொருட்கள் உள்ளிட்டவற்றின் ஏற்றுமதிக்கும் அனுமதி மறுக்கப்பட்டது. இந்நிலையில், பால் பொருட்களின் உற்பத்தி அதிகரித்ததால், சென்ற ஜூன் மாதம், கொழுப்பு நீக்கப்பட்ட பால் பொருட்களின் ஏற்றுமதி மீதான கட்டுப்பாடு நீக்கப்பட்டது. தற்போது, மொத்த பால் பவுடர் மற்றும் பால் பொருட்களை வெண்மையாக்கும் நிறமி களின் ஏற்றுமதிக்கும், அனுமதி அளிப்பது குறித்து, மத்திய வேளாண் அமைச்சகத்தின் கீழ் இயங்கும், கால்நடை துறை பரிசீலித்து வருகிறது.

நடப்பு 2012-13ம் நிதியாண்டில், நாட்டின் பால் பவுடர் உற்பத்தி, 1.12 லட்சம் டன்னாகவும், தேவை 88 ஆயிரம் டன்னாகவும் இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. தேவையை விட, உற்பத்தி அதிகரிக்கும் என்பதால், மொத்த பால் பவுடர் ஏற்றுமதிக்கு அனுமதி அளிக்கப் படும் என, தெரிகிறது.

பால் உற்பத்தி:உலகளவில் பால் உற்பத்தியில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. கடந்த 1995-96ம் நிதியாண்டில், நாட்டின் பால் உற்பத்தி 6.62 கோடி டன்னாக இருந்தது. இது, கடந்த 2010-11ம் நிதியாண்டில், 12.18 கோடி டன்னாக உயர்ந்துள்ளது.கடந்த 2000-01 முதல் 2010-11ம் நிதியாண்டு வரை, நாட்டின் பால் உற்பத்தி, சராசரியாக, 4 சதவீதம் என்ற அளவில் வளர்ச்சி கண்டுள்ளது.

**தமிழகம்:**இந்தியாவில், தமிழகம், உத்தரபிரதேசம்,ராஜஸ்தான், மகாராஷ்டிரா மற்றும் மேற்குவங்க மாநிலங்கள், அதிக அளவில் பசும் பால் உற்பத்தியை மேற்கொண்டு வருகின்றன.எருமைப் பால் உற்பத்தியில், பஞ்சாப்,குஜராத், ஆந்திரா, ராஜஸ்தான், உத்தரபிரதேசம் ஆகிய மாநிலங்கள் முன்னிலையில் உள்ளன.இந்தியாவில், பால் மற்றும் பால் பொருட்கள் உற்பத்தி, கடந்த 2011-

12ம் நிதியாண்டில், 15.3 சதவீத வளர்ச்சியை கண்டுள்ளது.

இவற்றுக்கான தேவை, வரும் 2016ம் ஆண்டில், 15.50 கோடி டன்னாகவும், 2022ம் ஆண்டில், 21 கோடி டன்னாகவும் வளர்ச்சி காணும் என, தேசிய பால் பண்ணை மேம்பாட்டு வாரியம் மதிப்பிட்டுள்ளது.இதை கருத்தில் கொண்டு, இவ்வாரியம், 17,300 கோடி ரூபாய் மதிப்பீட்டில், தேசிய பால் பண்ணை திட்டத்தை உருவாக்கியுள்ளது. இதன்படி, முதற்கட்டமாக, 14 மாநிலங்களில், பால் உற்பத்தியை அதிகரிக்க, 2,242 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

**பங்களிப்பு:**உள்நாட்டில் கறவை மாடுகளின் உற்பத்தியை அதிகரிக்கவும், விவசாயிகள், சுலபமாக அமைப்பு சார்ந்த பால் பதப்படுத்தும் வசதிகளைப் பெறவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.கடந்த 2010ம் ஆண்டு மார்ச் மாத நிலவரப்படி, இந்தியாவில், தனியார் துறையின் பால் பதப்படுத்தும் திறன், 5.71 கோடி டன்னாக உள்ளது. இது, கூட்டுறவு சங்கங்களில், 3.72 கோடி டன்னாக உள்ளது.

## உணவு பொருட்களின் விலை "விர்...'தீபாவளிக்கு மேலும் அதிகரிக்கும்



மதுரை:தீபாவளி பண்டிகைக்கு ஒரு மாதம் உள்ள நிலையில், உணவுப்பொருட்களின் விலை 10 சதவீதம் அதிகரித்துள்ளது. தீபாவளியின்போது இன்னும் விலை அதிகரிக்கும்.தீபாவளிக்காக இனிப்பு, பலகாரங்களுக்கு இப்போதே ஆர்டர்கள் குவிகின்றன. தீபாவளி அன்று உடலுக்கு நல்லெண்ணெயும், உணவுக்கு சூரியகாந்தி எண்ணெயும் கட்டாயம்.

இதன் வரத்து சீராக இருந்தாலும், மின்வெட்டு, மூலப்பொருட்களின் விலை உயர்வை காரணம் காட்டி "செயற்கையாக' விலை உயர்த்தப்பட்டுள்ளது.கடந்த தீபாவளி அன்று, 124 ரூபாய்க்கு விற்ற ஒரு லிட்டர் நல்லெண்ணெய், தற்போது, 160 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. தும்பை நல்லெண்ணெய், 135 ரூபாயிலிருந்து, 160 ரூபாயாக உயர்ந்துள்ளது. சூரியகாந்தி எண்ணெய், 79

ரூபாயிலிருந்து, 82 ரூபாயாக அதிகரித்துள்ளது.

அடுத்ததாக, பருப்பு வகைகள் வடைக்கும், ஈரல் கூட்டுக்கும், சில இனிப்பு வகைகளுக்கும் பயன்படுத்தப்படும் கடலை பருப்பின் விலை, கடந்தாண்டு தீபாவளியின் போது, ஒரு கிலோ 40 ரூபாயாக இருந்தது. நடப்பாண்டு வரத்து சீராக இருந்தாலும், தீபாவளியை முன்னிட்டு, இதன் விலை, தொடர்ந்து அதிகரித்து வருகிறது. கடந்த வாரம், கிலோ, 62 ரூபாய்க்கு விற்கப்பட்ட கடலை பருப்பு, தற்போது, 65 ரூபாயாக உயர்ந்துள்ளது.

இதுகுறித்து பருப்பு வகைகளின் வியாபாரிகள் சங்கச் செயலர் வெற்றிச்செல்வன் கூறுகையில், "மழையின்மையால் உற்பத்தி பாதித்துள்ளது. கறுப்பு கடலைக்கு விலை குறைவாக கிடைக்கும் என்பதால், வெள்ளை நிற கடலையை உற்பத்தி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். இதற்கு ஏற்றுமதி வாய்ப்பு அதிகம் உள்ளது என்பதும் காரணம்' என்றார்.

இனிப்பு மற்றும் இறைச்சி உணவுகளுக்கு பயன்படுத்தப்படும், ஒரு சில நறுமணப் பொருட்களின் விலையும் கிலோவிற்கு, 10 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. "தீபாவளி நெருங்கும் சமயத்தில் இன்னும் விலை அதிகரிக்கும்' என வியாபாரிகள் அச்சம் அடைந்துள்ளனர்.தற்போது, கீழமாசி வீதி பலசரக்கு கடைகளில், ஒரு கிலோ மஞ்சள் தூள், 120 ரூபாய்க்கும், மல்லி பொடி, 100 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது.

ஆட்டுக்கறி விலையை பொறுத்தவரை, பெரும்பாலான கடைகளில், தற்போது கிலோ, 400 ரூபாய் முதல் 450 ரூபாய் வரை விற்கப்படுகிறது. இதன் விலை, தீபாவளியின்போது, மேலும் அதிகரிக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

17.10.2012 P.M

18.10.2012 A.M

## தொழிலாளர் ஸ்டிரைக் வாபஸ் பால்வெட்டும் பணி துவக்கம்



நாகர்கோவில் : அரசு ரப்பர் கழக தொழிலாளர்கள் நேற்று பணிக்கு திரும்பிய நிலையில், ரப்பர் பால் வெட்டும் பணி மீண்டும் தொடங்கியுள்ளது. குமரி மாவட்டத்தில் அரசு ரப்பர் கழகத்தின் கீழ் 2500 தொழிலாளர்கள் வேலை பார்க்கின்றனர். இவர்கள் ஊதிய உயர்வு உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த ஜூலை 16ம் தேதி முதல் 3 மாதமாக வேலைநிறுத்தம் செய்தனர். பல்வேறு கட்ட பேச்சுவார்த்தைக்கு பின், 16ம் தேதி ஊதிய உயர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

இதையடுத்து, அனைத்து தொழிலாளர்களும் நேற்று காலை பணிக்கு திரும்பினர். அரசு ரப்பர் கழகத்தில், கீரிப்பாறை, மணலோடை, மயிலாறு, கோதையாறு, சிற்றார் ஆகிய 5 கோட்டங்களின் கீழ் 9 பிரிவுகள் செயல்பட்டு வருகிறது. நீண்ட நாட்களாக பால்வெட்டப்படாமல் இருந்ததால் 15 நாட்களுக்கு உற்பத்தி முழுமையாக இருக்காது. அதன் பின்னரே, ரப்பர் மரத்தில் இருந்து பால் வடிய தொடங்கும். பின் ரப்பர் ஷீட்கள் உற்பத்தி தொடங்கும்.

17th oct 2012 P.M

**மதுரை விவசாய கல்லூரியில் எண்ணெய் வித்து மரங்களுக்கு 3 ஏக்கர் பரப்பில் தனி பூங்கா**

மதுரை, :மதுரை விவசாய கல்லூரியில் எண்ணெய் வித்து மரங்களுக்கான தனி பூங்கா, 3 ஏக்கர் பரப்பளவில் உருவாக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் பயன்படுத்துவதில் உலகளவில் இந்தியா 5வது இடத்தில் உள்ளது. நம் நாட்டில் ஆண்டுக்கு 250 மில்லியன் டன் பெட்ரோலிய எரிபொருள் பயன்படுத்தப்படுகிறது. நாட்டில் உயிரி எரிபொருளின் உபயோகத்தை குறைக்க தேசிய உயிரி எரிபொருள் இயக்கம் உருவாக்கப்பட்டு, நாடு முழுவதும் சிறப்பு திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், உயிரி எரிபொருள் மரங்களை விவசாய நிலங்கள் மற்றும் மானாவாரி தரிசு நிலங்களில் பயிரிடுவதற்கான முயற்சிகள் தீவிரமாக நடந்து வருகின்றன.

உயிரி எரிபொருள் இந்தியாவில் பற்றாக்குறையாக இருப்பதால் பல மாநிலங்களில் 5 சதவீத உயிரி எரிபொருட்களை, மரபு எரிபொருட்களுடன் கலந்து பயன்படுத்தப்படுகின்றன. உலகில் சமையல் எண்ணெய் உற்பத்தியில் இந்தியா 4வ இடத்தில் இருந்தாலும், நமது தேவையில் 60 சதவீதம் மட்டுமே நிறைவேற்றிக் கொள்கிறோம். மீதி 40 சதவீதம் இறக்குமதி மூலம் பூர்த்தி செய்யப்படுகிறது.

இத்தருணத்தில் நமது எண்ணெய் வித்து உற்பத்தியை நாமே உற்பத்தி செய்ய குறைந்த செலவிலான சாகுபடி தொழில்நுட்பத்தையும், அரசு சலுகைகளையும் பயன்படுத்தி எண்ணெய் வித்து உற்பத்தியை பெருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மதுரை வேளாண்மை கல்லூரியில் உழவியல் துறை சார்பாக இரண்டு நாள் தேசிய கருத்தரங்கு தாவர எரிபொருள் எண்ணெய் மரங்கள் உற்பத்தி பயன்பாடு மற்றும் சந்தைபடுத்தல் தொடர்பாக நடத்தப்பட்டது.

இக்கருத்தரங்கின் தொடர்ச்சியாக மதுரை வேளாண்மை கல்லூரியில் சுமார் 3 ஏக்கர் நிலப்பரப்பில் தாவர எரிபொருள் மரங்களை கொண்ட பூங்கா துவக்கப்பட்டுள்ளது. எண்ணெய் வித்து மரங்களான வேம்பு, புங்கன், இலுப்பை போன்ற மரங்கள் நடப்பட்டுள்ளன. இத்திட்டத்தை கல்லூரி முதல்வர் சுப.சுந்தரம் மரக்கன்று நட்டு துவக்கி வைத்தார். உழவியல் துறைத்தலைவர் பாலசுப்பிரமணியன், என்.எஸ்.எஸ். திட்ட அலுவலர் பேபிராணி, வனத்துறை காவலர் கருப்புசாமி, வேளாண் அலுவலர் முருகையா கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை பேராசிரியர்கள் சுவாமிநாதன், முருகேஷ் செய்திருந்தனர்.

## மல்லிகை பூவை மதிப்பு கூட்டிய பொருளாக மாற்ற அறிவுறுத்தல்

மதுரை, : மல்லிகை பூவை மதிப்புகூட்டிய பொருளாக மாற்றினால் இரட்டிப்பு வருவாய் பெறலாம் என, வேளாண்மைத்துறை துணை இயக்குனர் மூர்த்தி கூறினார்.

மதுரை விவசாய கல்லூரியில் மல்லிகை சரம் தொடுத்தல் மற்றும் சிப்பமிடுதல் குறித்து ஒரு நாள் பயிற்சி முகாம் நடந்தது. மண் மற்றும் சுற்றுச்சூழல் துறைத்தலைவர் முகமது ஆரூன் வரவேற்றார். கல்லூரி முதல்வர் சுந்தரம் துவக்கி வைத்தார். வேளாண்மைத்துறை துணை இயக்குனர் மூர்த்தி பேசியதாவது:

மலர் உற்பத்தியாளர்கள் மலரை, வெறும் மலராக மட்டும் பார்க்கக்கூடாது. மலரை மதிப்புகூட்டப்பட்ட பொருளாக மாற்றி சந்தைப்படுத்தினால் இரட்டிப்பு வருவாய் பெற முடியும். மும்பை, டெல்லி, ஐதராபாத்தில் மல்லிகைக்கு அதிக வாய்ப்புகள் உள்ளன. இந்த நகரங்களில் வசிப்பவர்கள் மல்லிகையை பூவாக இல்லாமல், சரமாக இருக்க வேண்டும் என விரும்புகின்றனர். ஒரு கிலோ பூ தொடுத்தால், ரூ.70 சம்பாதிக்கலாம். மதிப்பு கூட்டிய பொருளாக மல்லிகையை மாற்றும் போது, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருவாய் ஈட்டலாம் என, அவர் பேசினார். மனையியல் கல்லூரி முதல்வர் பானுமதி, மல்லிகை வியாபாரிகள் சங்க தலைவர் ராமச்சந்திரன், மதுரை வேளாண் விற்பனைக்குழு செயலாளர் தவசிமுத்து, உதவி பேராசிரியை பாக்கியத்து சாலிகா கலந்துகொண்டனர்.

## ஒற்றை நாற்று முறையில் நடவு செய்யும் பணி

காட்டுமன்னார்கோவில், : காட்டுமன்னார்கோவில் பகுதி விவசாயிகள் நிறைந்த பகுதி. இங்கு வடவாறு, வடக்கு ராஜன் வாய்க்கால், வீராணம் ஏரி ஆகியவற்றின் மூலம் சுமார் ஒரு லட்சம் ஏக்கர் விளை நிலங் கள் பாசனம் பெறுகிறது. இந்த ஆண்டு மேட்டூர் அணை தாமதமாக திறக்கப்பட்டதால் விவசாயிகள் மழையை நம்பி நேரடி நெல் விதைப்பு பணியில் ஈடுபட்டனர். சில விவசாயிகள் தண்ணீர் திறந்து நடவு பணி மேற்கொள்ளலாம் என்ற நிலையில் இருந்தனர். இந்நிலையில் பாசனத்துக்கு கீழணை தண்ணீர் திறக்கப்பட்டதால் விவசாயிகள் நாற்று விடும் பணியை மேற்கொண்டு வருகின்றனர். சிலர் தண் ணீர் தட்டுப்பாடு ஏற்படும் என்ற எண்ணத்தில் ஒற்றை நாற்று நடவு முறையில் விவசாயம் செய்ய விதை விடும் பணியை தொடங்கி உள்ளனர். ஒரு ஏக்கருக்கு இந்த முறையில் நடவு செய்ய சுமார் 5ல் இருந்து 7 கிலோ வரை விதை நெல் போதுமானதாகும். விதை விட்ட 15ம் நாள் நாற்றை பறித்து இயந்திரம் மூலம் நடவு செய்யலாம். இந்த முறையில் நடவு செய்தால் குறைந்த அளவே தண்ணீர் தேவைப்படும். பாய்ச்சலும்,

காய்ச்சலுமே இந்த நடவு முறைக்கு ஏதுவானதாகும். இதை கருத்தில் கொண்டு சில விவசாயிகள் இந்த முறையில் விதை விடும் பணியை தொடங்கியுள்ளனர்

**விவசாய பணிகள் தீவிரம்**

விருதுநகர், : விருதுநகர் மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை பொய்த்து போன நிலையில், வடகிழக்கு பருவ ம ழை கடந்த சில தினங்களாக பெய்து வருகிறது. இந்த மழையால் விவசாய பணிகள் துவங்கி உள்ளன.

மாவட்டத்தில் ஒரு லட்சத்து 30ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் விவசாயம் நடக்கும். மழை தாமதமாக பெய்வதால், விவசாய பரப்பளவு 40சதவீதம் குறைய வாய்ப்பு உள்ளது. தற்போது பெய்யும் மழையால், காரியாபட்டி, திருச்சுழி, அருப்புக்கோட்டை பகுதிகளில் மக்காச்சோளம், பாசிப்பயறு, உளுந்து, துவரை உள்ளிட்டவைகளை விதைக்கும் பணியில் விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர். ராஜபா ளையம், திருவில்லிபுத்தூ ர், சேத்தூ ர், வத்திராயிருப்பு பகுதிகளில் நெல் விதைப்பு பணிகள் துவங்கி உள்ளன.

நேற்று காலை நிலவரப்படி மழையளவு(மி.மீ) வருமாறு: திருவில்லிபுத்தூ ர் 18, வத்திராயிருப்பு 14, பிளவக்கல் 16, சிவகாசி 2.6, காரியாபட்டி 0.4.

பெரியார் அணையின் மொத்த கொள்ளளவான 44அடியில் 25அடி தண்ணீர் நிரம்பியுள்ளது. அணை க்கு வினாடிக்கு 69கனஅடி நீர்வரத்து உள்ளது.

கோவிலாறு அணையின் மொத்த கொள்ளளவான 41 அடியில் 12அடி தண்ணீர் நிறைந்துள்ளது. அணைக்கு வினாடிக்கு 8கனஅடி தண்ணீர் வரத்து உள்ளது. இருக்கன்குடி அணையின் 22அடி கொள்ளளவில் 5அடி நீர் நிறைந்துள்ளது. குல்லூர்சந்தையில் 2அடி, ஆனைக்குட்டம் அணையில் 5அடி தண்ணீர் நிரம்பியுள்ளது.

**கசக்கிறது கரும்பு...! விவசாயிகளை பிழியும் ஆலைகள் புதிய கட்டுப்பாட்டால் வேதனை கி.வினோத்குமார்.**

திருவண்ணாமலை, :கரும்புக்கான கொள்முதல் விலை குறைவு, சாகுபடி செலவு அதிகம் என ஏற்கனவே வேதனையில் தவிக்கும் விவசாயிகளுக்கு, வெளி மாவட்ட ஆலைகளுக்கு கரும்பு சப்ளை செய்ய கூடாது என்னும் கட்டுப்பாடு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

கரும்பு சாகுபடி அதிகமுள்ள நாடுகளில் பிரேசில் முதலிடத்திலும், இந்தியா இரண்டாமிடத்திலும் இருக்கிறது. கரும்பு உற்பத்தியில் தமிழகத்தின் பங்களிப்பு மிக அதிகம். பாரம்பரியமான உணவு தானிய உற்பத்தியில் இருந்து, பணப்பயிரான கரும்பு சாகுபடிக்கு பெரும்பாலான விவசாயிகள்

மாறினர். ஒரு ஆண்டு பயிரானாலும், பொருளாதார மாற்றத்தை கொண்டுவரும் என விவசாயிகள் நம்பினர்.

ஆரம்ப காலத்தில் கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு சமூகத்தில் தனி மரியாதையும்கூட கிடைத்தது. சர்க்கரை ஆலைகளும் ஆதரவுக்கரம் நீட்டின. ஆனால், தற்போது நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. ஊருக்கெல்லாம் இனிக்கும் கரும்பு, உற்பத்தியாளர்களுககு மட்டும் கசக்கிறது. ஆண்டுதோறும் இழப்புக்கு மேல் இழப்பு என வேதனையில் வாடுகின்றனர் கரும்பு விவசாயிகள்.

உற்பத்திச் செய்யும் வேளாண் விளைபொருட்களை, விரும்பிய நபருக்கு விற்பனை செய்யும் உரிமை விவசாயிக்கு உண்டு. கட்டுப்படியான விலை கிடைக்கும் வரை காத்திருக்கலாம்; பேரம் பேசலாம். ஆனால், கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிக்கு மட்டும் அந்த உரிமையில்லை. பயிர் செய்வது மட்டும்தான் விவசாயி. அதற்கான விலையை நிர்ணயிப்பதும், வெட்டு உத்தரவு கொடுப்பதும், விளைந்த கரும்பை ஏற்பதும், ஏற்காததும் அரசின், ஆலைகளின் உரிமையாக உள்ளன.

விதைக் கரும்பு செலவு, வேளாண் பணிக்கு ஆட்கள் பற்றாக்குறை, கூலி உயர்வு, களையெடுப்பு, உரம், பூச்சிக்கொல்லி மருந்துகளின் விலை உயர்வு என பல்வேறு நெருக்கடிகளால், கரும்புக்கான உற்பத்தி செலவு பல மடங்கு அதிகரித்துள்ளது. பாசனத்துக்கு தண்ணீர் பற்றாக்குறையும், மின்வெட்டு பிரச்சனையும் அலைகழிக்கின்றன. ஏக்கருக்கு 40 டன் கரும்பு விளைந்த நிலத்தில், தற்போது 30 டன் விளைச்சல் என்பதே அரிதாகிவிட்டது.

ஆனால், கரும்புக்கு அரசு நிர்ணயித்துள்ள விலை டன்னுக்கு ரூ.2,100 மட்டுமே. அதிலும், 100 ரூபாயை ஆலைகள் பிடித்துக் கொள்கின்றன. உற்பத்தி செலவுக்குகூட கட்டுப்படியாகாத நிலையில், ஆலையில் சிக்கிய கரும்பாக விவசாயிகள் பரிதவிக்கின்றனர். கூடுதல் சுமையாக வெட்டுக் கூலியும் டன்னுக்கு ரூ.500 முதல் ரூ.600 வரை செலவிட வேண்டிய நெருக்கடியும் ஏற்பட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள 16 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகள், 28 தனியார் சர்க்கரை ஆலைகளை சார்ந்துதான் கரும்பு விவசாயம் நடக்கிறது. ஆனால், உரிய நேரத்தில் வெட்டு உத்தரவு வழங்காமல் அலைகழிக்கின்றன. 10 மாதத்தில் முழுமையாக வளர்ச்சியடையும் கரும்புக்கு, 16 மாதங்கள் கடந்தும் வெட்டு உத்தரவு தருவதில்லை. இதனால், பருவம் கடந்த கரும்பு நிலத்திலேயே காய்ந்து, எடையிழந்து விடுகின்றன.

அரவை திறனுக்கு அதிகமான கரும்பை பதிவு செய்வது, தாமதமாக அரவை தொடங்குவது, திறன்

குறைந்த, பழுதடைந்த இயந்திரங்களை பயன்படுத்துவது என சர்க்கரை ஆலைகள் செய்யும் தவறுகளால்தான் வெட்டு உத்தரவு உரிய காலத்தில் வழங்குவதில் சிக்கல் ஏற்படுகிறது.

ஆலைகள் செய்யும் தவறுகளால், பாதிக்கப்படுவதோ விவசாயிகள். பதிவு செய்த கரும்பை உரிய காலத்தில் ஏற்க மறுக்கும் ஆலைகள் மீது இதுவரை எந்த நடவடிக்கையையும் அரசு எடுத்ததில்லை.

இந்நிலையில், ஆலைகளுக்கு பதிவு செய்த கரும்பு மற்றும் பதிவு செய்யாத கரும்பை வெளி மாவட்ட மற்றும் வெளி மாநில ஆலைகளுக்கு சப்ளை செய்யக் கூடாது என திருவண்ணாமலை, வேலூர் மாவட்ட கலெக்டர்கள் தடை விதித்துள்ளனர். மேலும், இதுபோல சப்ளை செய்யும் விவசாயிகள் மீது சட்ட ரீதியான கிரிமினல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பு கரும்பு விவசாயிகளுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கரும்பு சாகுபடி ஒப்பந்த விவசாயம்தான். அதில், ஆலைகளுக்கும், விவசாயிகளுக்கும் சம பொறுப்பு உள்ளது. ஆனால், உரிய காலத்தில் வெட்டு உத்தரவு வழங்காமல், காலம் தாழ்த்துவதால் ஏற்படும் இழப்பு விவசாயிக்கு மட்டும்தான். ஆலைகளுக்கு கிடையாது. எனவே, தவிர்க்க இயலாத நெருக்கடியில் பிற ஆலைகளுக்கு கரும்பை சப்ளை செய்யும் நிலை விவசாயிகளுக்கு ஏற்படுகிறது.

இந்த சிக்கலை தீர்க்க ஆலைகள் மீது தனி கவனம் செலுத்த வேண்டிய அரசு நிர்வாகம், விவசாயிகள் மீது பாய்வது நியாயமா? என்று கேள்வி எழுப்புகின்றனர் விவசாயிகள். ஆலைகளில் சிக்கிய கரும்பாக பரிதவிக்கும் கரும்பு விவசாயிகளின் மீது அரசு தனி கவனம் செலுத்த தவறினால், விரைவில் கரும்பு காட்சிப் பொருளாக மாறுவதற்கும் வாய்ப்புள்ளது.

பாக்ஸ்

--------------------------

கரும்பு கட்டுப்பாடு

சட்டத்தை

ரத்து செய்ய வேண்டும்

தமிழ்நாடு விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு பொதுச்செயலாளர் செ.நல்லசாமி கூறியதாவது:

கடந்த 1966ல் கொண்டு வரப்பட்ட கரும்பு கட்டுப்பாடு சட்டம், விவசாயிகளுக்கான

கொத்தடிமைச் சட்டமாகும். அதை உடனடியாக அரசு ரத்து செய்ய வேணடும். கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிக்கு, அதை விரும்பியபடி விற்கும் உரிமை வேண்டும். பன்னாட்டு வணிக நிறுவனங்களை எல்லாம் அனுமதித்துள்ள நிலையில், பக்கத்து மாவட்டத்துக்கு கரும்பை கொண்டு செல்லக் கூடாது என்பது வியப்பாகவும், அதிர்ச்சியாகவும் உள்ளது. தேசிய வேளாண் விளைபொருள் விலை நிர்ணயக்குழு பரிந்துரை செய்யும் விலையை, இதுவரை கரும்புக்கு அரசு வழங்கியதில்லை.

கரும்பில் இருந்து சர்க்கரை மட்டும் எடுப்பதில்லை. எத்தனால், மின்சாரம், காகிதம் உற்பத்தியாகிறது. அவற்றின் லாபம் விவசாயிக்கு கிடைப்பதிலலை. கரும்பு பிழிதிறனுக்கு மட்டும்தான் விலை தருகின்றனர். அதுவும் கட்டுப்படியாகாத விலை. எனவே, கரும்பு டன்னுக்கு ரூ.3,500 கொள்முதல் விலை வழங்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

வெட்டுக் கூலிக்கா
விவசாயம் செய்வது?

ஒரு ஆண்டு வரை கண்விழித்து, வயல் வெளியில் காத்திருந்து, கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிக்கு கண்ணீர்தான் மிச்சம். ஒரு டன் கரும்புக்கு வெட்டுக்கூலி மட்டும் ரூ.500 ரூ.600 வரை செலவாகிறது. இதனால், வெட்டுக்கூலி போக விவசாயிக்கு கிடைப்பது ரூ.1,400 மட்டும்தான்.

எனவே, வெட்டுக்கூலியை ஆலைகள் ஏற்க வேண்டும், கரும்பு வெட்டும் இயந்திரங்களை ஆலைகள் வழங்க வேண்டும் என்பது விவசாயிகளின் கோரிக்கை. மேலும், லாரி வாடகையை ஆலைகள் ஏற்றாலும், மாமூல் என்ற பெயரில் விவசாயிகளிடம் கட்டாய வசூல் வேட்டை நடக்கிறது. இதுகுறித்து பலமுறை விவசாயிகள் புகார் செய்தும் பயனில்லை.

வீம்புக்கு விவசாயம்
வயிற்றுக்கு ஈரத்துணி

விளை நிலமெல்லாம் தரிசாகவும், வீட்டு மனைகளாகவும் மாறுவதற்கு காரணம், விவசாயத்தில் உழைப்புக்கேற்ற லாபமில்லை. உழும் செலவுகூட உழவனுக்கு கிடைப்பதில்லை.

கிராமப்புறங்களில் இன்னும் விவசாயம் செய்யும் பலரும், 'பரம்பரையா விளைஞ்ச மண்ணை தரிசாக வச்சா மரியாதை இருக்காதுனு' கவுரவத்துக்காக விவசாயம் பார்க்கும் நிலையே பரவலாக காணப்படுகிறது.

தி.மலை கலெக்டர் அலுவலகத்தில் சமீபத்தில் நடந்த விவசாயிகள் குறைதீர்வு கூட்டத்தில் பேசிய ஒரு விவசாயி, வீம்புக்கு விவசாயம் பார்க்கிறோம். கடன் இல்லாத விவசாயியை இங்க காட்டவே முடியாது என்று குறிப்பட்டார்.

மூடப்பட்ட சர்க்கரை ஆலை

திருவண்ணாமலையில் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு மூடப்பட்ட அருணாச்சலா சர்க்கரை ஆலை, விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய இழப்பீடு தொகை பல கோடி ரூபாய். ஆனால், விவசாயிகள் பலமுறை முறையிட்டும், போராடியும் இதுவரை இழப்பீடு கிடைக்காமல் அவதிபடுகின்றனர். செயலிழந்த அருணாச்சலா சர்க்கரை ஆலையை கூட்டுறவுத்துறை ஏற்று நடத்த வேண்டும் என்ற கோரிக்கையும் நிறைவேறவில்லை.

## கள்ளக்குறிச்சி தாலுகாவில் கரும்பு பயிரிடும் பணி தீவிரம்

கள்ளக்குறிச்சி,  தமிழகத்தில் பருவமழை பொய்த்து போனதால் விவசாயிகள் பல ஏக்கர் பரப்பில் விவசாயம் செய்யாமால் இருந்து வந்தனர்.

இந்நிலையில் கடந்த வரங்களில் லேசான மழை பெய்ததால் நிலத்தடி நீர் உயர்ந்துள்ளது. இதனால் கள்ளக்குறிச்சி தாலுகாவில் உள்ள விவசாயிகள் தங்கள் நிலங்களை உழுது கரும்பு, மக்காசோளம், எள், பருத்தி போன்ற பயிர்களை பயிரிட்டு வருகின்றனர். தொடர்ந்து மழைபெய்ய வாய்ப்பு உள்ளதால் கள்ளக்குறிச்சி அருகேயுள்ள கோமுகி அணை 32 அடி வரை உயர்ந்துள்ளது. இதனால் விவசாயிகளுக்கு அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப் படும் அதன் மூலம் விவசாயம் செய்யலாம் என்று தயார் நிலையில் உள்ளனர்.

## தண்ணீரின்றி வறண்டு கிடக்கும் மழைநீர் சேமிப்பு வாய்க்கால்

வானூர், விழுப்புரம் மாவட்டம் வானூரில் அரசு விதைப்பண்ணை உள்ளது. இந்த விதை பண்ணைக்கு சுமார் 60 ஏக்கர் அளவில் நிலம் உள்ளது. இந்த நிலத்தில் நெல் சாகுபடி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வீரிய ரக விதைகள் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. நீர்மூழ்கி மோட்டார் மூலம் விவசாய பணிகள் செய்யப்பட்டு வந்தாலும் மழைநீரில் பயிரின் வளர்ச்சி அதிகமாக இருக்கும். இந்த பகுதியில் பெய்யும் மழைநீர் அருகே உள்ள பெரிய ஏரிக்கு சென்று விடுவதால் அதிலிருந்து மீண்டும் தண்ணீர் திறந்து பாய்ச்சலுக்கு விட வேண்டும். தற்போது மழைகாலம் தொடங்கிவிட்டதால் மழை நீரை சேமிப்பதற்காக சமீபத்தில் மிகப்பெரிய அளவில் மழைநீர் சேமிப்பு வாய்க்கால் ஜேசிபி இயந்திரம் மூலம் இரண்டு இடங்களில் வெட்டப்பட்டது. ஆனால் பருவமழை தொடர்ந்து மக்களை ஏமாற்றி வருகிறது. இன்னும் பருவமழை பெய்யாததால் மழைக்காக வெட்டப்பட்டு வாய்க்கால் தண்ணீர் இன்றி வறண்டு கிடக்கிறது. எப்போது மழை வரும் என்று காத்துக்கொண்டிருக்கிறது. இதனால் விவசாயிகளும் கடும் அவதிக்கு ஆளாகியுள்ளனர்.

## மரக்காணத்தில் மரவள்ளி பயிரிட விவசாயிகள் ஆர்வம்

மரக்காணம், மரக்காணம் மற்றும் சுற்றுப்புற கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் தங்களது விளை நிலங்களில் நெல், கரும்பு, எள், மணிலா, தர்பூசணி உள்ளிட்ட பயிர்களையே பயிரிட்டு வந்தனர். ஆனால் இந்த வருடம் பருவ மழை பொய்த்து விட்டதால் ஏரி, குளம் போன்றவை வற்றியது. மின்சாரம் இல்லாததால் ஆழ்துளை கிணறு மூலமும் நீர் இறைக்க முடியவில்லை. இதனால் இப்பகுதி விவசாயிகள் வழக்கமாக செய்யும் பயிர்களுக்கு பதிலாக மரவள்ளி பயிர் செய்வதில் அதிக ஆர்வம் காட்டி வந்தனர். தண்ணீர் மற்றும் ஆட்கள் குறைவு என்பதால் சூழ்நிலையை கருதி விவசாயிகள் மரவள்ளிக்கிழங்கு பயிர் செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

18.10.2012 A.M

**முந்திவந்த வடகிழக்கு பருவமழையால்**
**சிறுவாணி–பில்லூர் அணைகளில் ர்மட்டம் ஏறுமுகம்**
**கோவைக்கு 3 மாதத்துக்கு குடி ர் பிரச்சினை இருக்காது**

சிறுவாணி–பில்லூர் அணைகளில் ர்மட்டம் ஏறுமுகமாக உள்ளது. இதனால் கோவை நகருக்கு 3 மாதத்துக்கு குடி ர் பிரச்சினை இருக்காது என்று அதிகாரி ஒருவர் கூறினார்.

கோவை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. தென்மேற்கு பருவமழை கைவிட்ட நிலையில், தற்போது வடகிழக்கு பருவமழை சற்று முந்திக்கொ டு பெய்யத்தொடங்கி உள்ளது. இதனால் கோவை மாவட்டத்தில் வற டு கிடந்த ர்நிலைகளில் த ணீர் தேங்க ஆரம்பித்துள்ளது.

அதிக பட்ச மழை

இதில் நேற்று பதிவான மழை அளவு(மி.மீட்டரில்) விவரம் வருமாறு:– அன்னூர்–3.80, ஏர்போர்ட் பீளமேடு–30.80, மேட்டு பாளையம்–16.20, பொள்ளாச்சி– 19, சூலூர்–63.20, கோவை வேளா மை பல்கலைக்கழகம்–36.80, சின்கோனா–20, சின்னக்கல்லார்–12, வால்பாறை பி.ஏ.பி–46, வால்பாறை தாலுகா–66, கோவை தெற்கு–17.27 எனவும், மொத்தம் சராசரியாக 27.59 ஆகும். வால்பாறையில் அதிகபட்ச மழை பதிவாகி உள்ளது.

இந்த நிலையில் கோவை நகருக்கு குடி ர் ஆதாரமாக விளங்கும் சிறுவாணி, பில்லூர் அணைகளில் ர் வரத்து அதிகரித்துள்ளது. கடந்த சில நாட்களாக சிறுவாணி அணை பகுதியில் நாள்தோறும் 10 செ.மீட்டர் மழை பெய்து வருகிறது. இதனால் அணையின் ர்மட்டம் உயர்ந்து 22 (மொத்த கொள்ளவு 50 அடி) அடியாக உள்ளது.

3 மாதத்துக்கு தாக்கு பிடிக்கும்

இதுகுறித்து கோவை மாநகராட்சி அதிகாரி ஒருவர் கூறியதாவது– தென்மேற்கு பருவமழை இல்லாமல் வற்றிவிடும் அபாயத்தில் இருந்த சிறுவாணி அணை த பி உள்ளது. தற்போது வடகிழக்கு பருவமழை முந்திக்கொ டு பெய்யத்தொடங்கி உள்ளது. சிறுவாணி அணை பகுதியிலும் மழை பொழிவு உள்ளது. இதனால் அணையின் ர்மட்டம் உயர்ந்து வருகிறது.

இதுபோல் பில்லூர் அணையிலும் ர்மட்டம் உயர்ந்து வருகிறது. இதனால் கோவை மாநகர பகுதியில் குடி ர் பிரச்சினை ஏற்பட வாய் பில்லை. தற்போது சிறுவாணி அணையில் உள்ள த ணீர், கோவை

நகருக்கு 3 மாதத்துக்கு தாக்கு பிடிக்கும். தொடர்ந்து மழை பெய்ய வாய் பு உள்ளதால் அணை நிரம்பும். அதன் பின்னர் சிறுவாணி குடி ருக்கு சிக்கல் ஏற்படாது. இவ்வாறு அவர் கூறினார்.

**கரும்பு விலைக்கான**
**ரங்கராஜன் குழு பரிந்துரையை மத்திய அரசு அமல்படுத்தக்கூடாது**
**தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கம் தீர்மானம்**

கரும்பு விலைக்கான ரங்கராஜன் குழு பரிந்துரையை மத்திய அரசு அமல்படுத்தக்கூடாது என்று ஈரோட்டில் நடந்த தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்க கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்ற பட்டது.

நிர்வாகிகள் கூட்டம்

தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கத்தின் மாநில நிர்வாகிகள் கூட்டம் ஈரோட்டில் நடந்தது. கூட்டத்துக்கு மாநில தலைவர் என்.பழனிச்சாமி தலைமை தாங்கினார்.

கூட்டத்தில் நிறைவேற்ற பட்ட தீர்மானங்கள் வருமாறு:–

அமல்படுத்தக்கூடாது

1966–ம் ஆ டு கரும்பு கட்டு பாடு சட்டத்தை ரத்து செய்யவே டும். கரும்புக்கான விலையை மத்திய, மாநில அரசுகள் அறிவி பதை கைவிடவே டும். சர்க்கரை ஆலைகளே விலையை தீர்மானித்து கொள்ளலாம்.

கரும்பு ஆலைகளில் உற்பத்தி ஆகும் 10 சதவீதம் சர்க்கரையை அரசுக்கு லெவியாக அளிக்கவே டியதில்லை. வெளிமார்க்கெட் விலைக்கே அரசு சர்க்கரையை வாங்கிக்கொள்ளலாம் ஆகியவை உள்பட பல அம்சங்களை மத்திய அரசு நியமித்த ரங்கராஜன் குழு பரிந்துரை செய்து உள்ளது. இந்த குழுவின் பரிந்துரையை மத்திய அரசு அமல்படுத்தக்கூடாது.

ஈரோட்டில் மாநில மாநாடு

கூட்டுறவு சங்க கரும்பு ஆலைகள் கரும்பு விவசாயிகளுக்கு ரூ.100 கோடி பாக்கி வைத்து உள்ளது. எனவே பாக்கித் தொகையை விவசாயிகளுக்கு வழங்கக்கோரி திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை முன் வருகிற 20–ந் தேதி (சனிக்கிழமை) முற்றுகை போராட்டமும், என.பி.கே.ஆர்.ஆர். கூட்டுறவு சர்க்கரை ஆலை முன் காலவரையற்ற உ ணாவிரத போராட்டம் நடத்துவது.

மாநில மாநாட்டை வருகிற நவம்பர் மாதம் 28–ந் தேதி ஈரோடு நடத்துவது என முடிவு செய்ய பட்டது. இதற்காக 70 பேர் கொ ட வரவேற்பு குழுவும், குழுவின் தலைவராக பி.காசிய ணனும், செயலாளராக ஏ.எம்.முனுசாமி ம், பொருளாளராக ஏ.அய்யாவும் தேர்வு செய்ய பட்டனர்.

மேற்க டவை உள்பட பல தீர்மானங்கள் நிறைவேற்ற பட்டன.